# சிங்கக் கொடியை என்றும் ஏற்கோம்

## நமக்கென்றோர் தனிக்கொடி உண்டு!

### தேசிய அரசுப் பேரவையில் உடுவில் பா. உ. முழக்கம்!

'சிங்கக்கொடியை சிங்கள மக்களின் தேசியக் கொடியாக நாங்கள் ஏற்றுக்கொள்ளுகிறோம். அந்த வகையில் அதற்கு நாங்கள் மதிப்பளிக்கவும் செய்கிறோம். ஆனால் அதை நாங்கள் எங்கள் தேசியக்கொடியாக ஒருபோதுமே ஏற்றதுமில்லை; ஏற்கப்போவதுமில்லை. நமது வரலாற்றில்- இப்போது தவிர-முன் எப்போதுமே சிங்கக்கொடியால் ஆட்சி செய்யப்பட்டதில்லை. எமது சொந்தக் கொடியால்தான் ஆட்சி செய்யப்பட்டோம்-''

—இவ்வாறு தேசிய அரசப் பேரவையில் 12 11.73ல் முழங்கினார் உடுவில் பா. உ. திரு. தர்மலிங்கம் அவர்கள்.

'தேசியக்கொடியையும் தேசிய கீதத்தையும் மதிக்காததால்தான் நான் மாஸ்கோ செல்வதினின்றும் தடுக்கப்பட்டதாக —அமைச்சர் (இலங்கரத்தின) கூறினார்.



'சிங்கக்கொடி சிங்கள மக்களின் தேசியக்கொடியென்பதை நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். அந்த அளவில் அதற்கு மதிப்பளிக்கிறோம். ஆனால் நான் சார்ந்திருக்கின்ற இலங்கைத் தமிழரசுக் கட்சி, 1948ம் ஆண்டு தொடக்கம் இந்தச்சிங்களத் தேசியக் கொடியையும், தேசிய கீதத்தையும் தமிழ் மக்களின் தேசியக் கொடியாகவும், தேசிய கீதமாகவும் ஏற்க மறுத்துவருகிறது என்பதை நான் அமைச்சருக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

1970ம் ஆண்டில் இதே கௌரவ அமைச்சர் (இலங்கரத்தின) கெய்ரோவில் நடை-

(5-ம் பக்கம் பார்க்க)

## "யாழ்ப்பாணம் இன்னும் நாட்டின் ஒரு பகுதிதான்!

### அரிசிவிலை உயர்வைக் கட்டுப்படுத்துவது ஆட்சியாளர்களாகிய உங்கள் கடமை"

"அரிசிப் பங்கீட்டு வெட்டினாலும், அரிசி, நெல் எடுத்துச் செல்வது சம்பந்தமாக அரசு விதித்துள்ள கட்டுப்பாடு முதலானவற்றாலும், இந்நாட்டின் தமிழ் மக்களே பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தோட்டப் பகுதிகளில் வாழுகின்ற தமிழ் மக்களுக்கு உணவு கிடைப்பதில்லை; யாழ்ப்பாணத்திலோ, வேறு எங்கும் இல்லாத அளவு அரிசி விலை கொடூரமான முறையில் உயர்ந்துள்ளது! யாழ்ப்பாணம், இன்னும் இந்நாட்டின் ஒரு பகுதியாகவே இருக்கின்றது ஆனகாரணத்தினால் அரிசி விலையை கட்டுப்படுத்த அரசாங்கம் தாமதமின்றி உடன் நடவடிக்கை எடுத்தேயாக வேண்டும்—''

—இவ்வாறு வரவு செலவுத்திட்டத்தின் மீது தேசிய அரசுப் பேரவையில் 12.11.73ல் உரை நிகழ்த்திய உடுவில் பா. உ. திரு. வி. தர்மலிங்கம் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

''அரிசி சம்பந்தமான அரசின் நடவடிக்கையால் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் தமிழ் மக்களே, அரிசிப் பங்கீட்டு வெட்டின் பின்னர், வெவ்வேறு பகுதிகளில், மூன்றரை, நான்கு ரூபாவுக்கு அரிசி விற்பனை செய்யப்படுகிறது. ஆனால் இலங்கையில் வேறு எங்குமே விற்காத அளவுக்கு, யாழ்ப்பாணத்தில் அரிசி அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றது:

''யாழ்ப்பாணத்தில் ஒரு கொத்து அரிசி ஏழு ரூபாவுக்கு இன்றைக்கு விற்பனையாகின்றது. இலங்கையிலே யாழ்ப்பாணத்தில் மட்டும்

(5-ம் பக்கம் பார்க்க)

### இந்திய புத்தக இறக்குமதி வெட்டு

## 'டைம்ஸ் ஆப் இந்தியா' கண்டனம்!

''இந்திய புத்தகங்கள், சஞ்சிகைகள் இறக்குமதியை இலங்கை அரசு கடுமையாக வெட்டிக் குறைக்குமானால்—அந்த நாட்டிலுள்ள தமிழ் சிறுபான்மை மக்களுடன் அது மேலும் விரோதத்தையே சம்பாதித்துக்கொள்ளும்!!

—இவ்வாறு 'தவறான நடவடிக்கை' எனும் தலைப்பில் 'டைம்ஸ் ஆப் இந்தியா' எழுதியுள்ள ஆசிரியத்தலையங்கமொன்றில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

''இந்தியாவிலிருந்துவரும் இந்த இலக்கிய சஞ்சிகைகள் இலங்கைத் தமிழர்களால் விரும்பிப் படிக்கப்படுகின்றன. இப்போது அவர்களுக்கு கிடைத்துவரும் இந்த புத்தகங்களின் எண்ணிக்கையில் மேலும் வெட்டு விழுமானால் தங்கள் கலாசார வளர்ச்சிக்கு உதவுகின்ற சக்திகளுக்கு தடைபோடுவதன் மூலம், இலங்கை அரசு தங்கள் கலாசாரத்தை வேரறுக்க முற்படுகிறது என்ற அச்சமே இலங்கைத் தமிழர்களின் உள்ளங்களில் மேலும் வலுப்படும்.

''தமிழர்கள் ஏற்கெனவே அமைதியிழந்திருக்கிறார்கள்; அரசாங்கம் உணவுற்பத்தியில் ஈடுபட்டுள்ளது; இந்தச் சந்தர்ப்பத்தில் புதிய புதிய பிரச்சினைகளைத் தோற்றுவிப்பது புத்திசாலித்தனமாகாது

''புத்தக, பத்திரிகை வர்த்தகத்தை சமப்படுத்துவதற்காக, இலங்கை புத்த

(5-ம் பக்கம் பார்க்க)

விசாரணையுமில்லை — விடுதலையுமில்லை

உணவு கொடுக்க வழியுமில்லை!

கூப்பன் வேண்டுமாம்

சிறையிலுள்ள தமிழ் இளைஞர்களை விடுதலை செய்யவும் மனமில்லை; வழக்குத் தொடுக்கவும் வக்கில்லை — ஆட்சியாளர்களுக்கு! இப்போது அவர்களுக்கு உணவு கொடுக்கவும் முடியவில்லை! 2 அவுன்ஸ் பாணும் 2½ அவுன்ஸ் சோறுமே அவர்களுக்கு கொடுக்கப்படுகிறதாம். அதுமட்டுமின்றி உணவுகொடுப்பதற்கு வீடுகளுக்கு எழுதி அவர்களது கூப்பன்களை எடுத்துத்தருமாறும் சிறை நிர்வாகம் இந்த இளைஞர்களுக்கு தொல்லை கொடுக்கிறதாம்!

சுதந்திரன்

SUTANTIRAN

தொலைபேசி: 23411 விலை சதம் 25

வள்ளுவர் ஆண்டு 2004, ஐப்பசி 26 உ (18-11-73) ஞாயிறு ஷவ்வால்: ஆகிர் 15—புத்தகம் 27 இதழ் 11

# தமிழ் இளைஞர் பேரவையின் அடுத்த திட்டம் தயார்!

## 50-வது நாள் உண்ணாவிரதத்தில் ஆயிரக் கணக்கானோர் பங்கேற்பர்!

50 நாள் உண்ணாவிரதம் முடிவடைந்ததும், அடுத்த நடவடிக்கைக்கான திட்டத்தை தமிழ் இளைஞர் பேரவையின் நிர்வாகக் குழு தயாரித்து விட்டதாகத் தெரியவருகிறது.

ஐம்பதாம் நாள் இறுதி உண்ணாவிரதம் 25-11-73 காலை 6. மணி தொடக்கம் மாலை 6. மணி வரை யாழ் முனியப்பர் கோவில் முன்றலில் நடைபெறவுள்ளது. இந்த உண்ணாவிரதத்தில், இளைஞர்களும் இளம் பெண்களும் ஆயிரக்கணக்கில் பங்கு கொள்ளவிருக்கிறார்கள். உண்ணாவிரத முடிவில் பிரமாண்டமான பொதுக் கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

இந்தப் பொதுக் கூட்டத்தில் வைத்து தமிழ் இளைஞர் பேரவையின் அடுத்த நடவடிக்கை பற்றிய திட்டம் பகிரங்கப்படுத்தப்படும் என்று தெரியவருகிறது.

இது சம்பந்தமாக தமிழ் இளைஞர் பேரவையின் சார்பில் திரு. சி. புஷ்பராசா வெளியிட்டுள்ள அறிக்கையில் பின்வருமாறு கூறியுள்ளார்!—

(5-ம் பக்கம் பார்க்க)

### தமிழ் இளைஞர் பேரவை நிர்வாகக் குழு விஸ்தரிப்பு!

ஐந்து நிர்வாக இயக்குனர்களைக் கொண்டதாக இயங்கி வந்த தமிழ் இளைஞர் பேரவையின் நிர்வாகக் குழு, இப்போது ஒன்பது உறுப்பினர்களைக் கொண்டதாக அண்மையில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது ஒன்பது நிர்வாகக் குழு உறுப்பினர்கள் வருமாறு:— மு. சரவணபவன், செ. செல்வக்குமார், சூ. போல்ப்பிள்ளை, சி. புஷ்பராசா, க. பத்மநாபா, அ. வரதராசா, கி. பிரான்சிஸ் இ. யோகேஸ்வரன், இ. தவராசா.

### முடக் கழுதைக்கு சறுக்கியது சாட்டு!

காங்கேசன்துறை இடைத்தேர்தலைகடந்த ஒரு வருடத்துக்கு மேலாக நடத்தாது சனநாயகத்தை கொலை செய்து வரும் ஆட்சியாளர்கள் — தமது சனநாயகக் கொலைக்கு காரணம், வடக்கில் நடைபெறும் வன்முறைகளே என்று நொண்டிச்சாட்டுக்களை திரும்பத்திரும்ப கூறிவந்தார்கள். இப்போது ஒரு புதுக் காரணம் கூறத்தொடங்கியிருக்கிறார்கள் அது என்ன தெரியுமா 'காலரா' நோய்!

ஆம், 13-11-73ல், தேசிய பேரவையில் ஜனப் அசீஸ் பேசிக்கொண்டிருக்கும்போது, ஜனநாயக உரிமைகள் பறிக்கப்பட்டிருப்பதாக எதிர்க்கட்சியினர் கூறுகிறார்களே — எங்கே என்ன உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன என்று கேட்டபோது, உடுவில் தொகுதி பா. உ. வி. தர்மலிங்கம் குறுக்கிட்டு காங்கேசன்துறை இடைத்தேர்தல் ஒரு வருடமாக நடைபெறவில்லையென்பதை சுட்டிக்காட்டினார்!

அதற்கு நிதியமைச்சர் டாக்டர் என். எம். கூறிய பதில் என்ன தெரியுமா?— 'எப்படி இடைத்தேர்தல் நாம் நடத்துவது? அங்குதான் காலரா நோய் இருக்கிறதே!'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரத் தமிழ் ஈழம்

(அளவை க. ஆதவன்)

ஒரு—
சுதந்திரத் தமிழ் ஈழம்
என்முன் தெரிகிறது.
நிதம்நிதம் நினைத்துப்
போற்றிய
சுதந்திரத் தமிழ் ஈழம்
என்முன் தெரிகிறது.
அங்கு—
அடிவருடிகளின்
ஆர்ப்பாட்டம்
தெரியவில்லை
துரோகிகளின்
துஷ்டத்தனம்
தெரியவில்லை
உண்ட வீட்டுக்கே
இரண்டகம் செய்யும்
சாக்கடைப்புழுக்கள்
கிடந்து
நெளியவில்லை
எங்கும் ஒரே பசுமை
ஆம்!
சுதந்திரமெனும்
தென்றல்
மெல்லெனத் தவழ்கிறது.
எங்கும் ஒரே புனிதம்
எங்கும் ஒரே நிசப்தம்
சிறைக்கூடங்கள்
வெறிச் சோடிக்
கிடக்கின்றன
எம்மை நாமே
ஆள்கிறோம்.
ஊழல்கள், லஞ்சங்கள்
முதலாளித்துவம்,
நிலப்பிரபுத்துவம்
இந்த வார்த்தைகளே
அங்கில்லை
ஆம்!
நிதம் நிதம்
நினைத்துப் போற்றிய
சுதந்திரத் தமிழ் ஈழம்
என்முன் தெரிகிறது
ஓ...
அது எவ்வளவு
புனிதமானது—

# ஏன்?

-பூநகர் மரியதாஸ்-

அன்னை தமிழே
நெஞ்சினிலே—
நீ தந்த நினைவுகளினால்
மகிழ்வுற்று...
நான்—
அடைந்த இன்பம்
எத்தனை கோடியோ—
நீ—
துன்புற்று, அல்லலுறும்
பொழுது—நான்
நாவும், கையும்
பேசா மடந்தையாகி
விட்டேனே!
ஏன்!... ஏன்!!... ஏன்!!!

# விழித்திடு இளைஞா!

(யோரட்ன, திருமலை)

விழித்திடடா இளைஞா!
வீரன் நீ விதித்திடடா!!
வழிப்போக்கரல்லர்
வாழப்பிறந்தவர்
நாம்—அது
ஈழத்தில் இறைவன்
எமக்கீந்த உரிமையடா!
ஆளவந்தார் மறுத்தார்;
ஏனென்று கேட்கும்
உரிமை எமதடா!
ஆண்டவன் அருளிய
உரிமைதனை
ஆள்பவர் பறித்தார்
என்றுவிட்டால்
பணிந்து பின்செலும்
பேடிகளல்லர் நாம்!
துணிந்து உயிர் துறக்கும்
காளைகள் நாம்!!
உரிமை பிறருக்கு
விற்று வாழ்பவன்
நடைப்பிணம் தம்பி!
உரிமைக் குயிர்நீப்பவன்
அடைவதுபெரும்
பேரின்பம் தம்பி!
அன்னை தமிழ்
ஆண்டவன் எமக்கிந்த
உரிமை தம்பி!
அன்னைக் குயிர்
துறப்பதென்
தெய்வக் கடமை தம்பி!!

# செக்கோசிலவேக்கியாவின் விடுதலை வீரன் தொமஸ் மசாரிக்!

எஸ். கே. எஸ். உதயன்
(சண்டிலிப்பாய்)

ஆட்சியாளரினால் அடக்கப்பட்ட மக்கள் அடங்கி, ஒடுங்கி, அறிவிழந்து, செயலிழந்து அடிமைகளோடு அடிமைகளாக வாழ்ந்த அந்த நேரத்திலே, தனக்கென்றோர் மொழி மதம், கலை கலாச்சாரங்கள் எதுவுமே அற்ற அந்த சூழ்நிலையிலே, அடிமைவாழ் பூமியாக, அடங்காது குரல் கொடுப்போன் மாழ் பூமியாக, அவனியிலே ஒரு நாடு அந்நேரத்தில் இருந்ததென்றால் அது செக்கோஸ்லாவாகியா அன்றி வேறென்றில்லை ஆமாம்! உரிமை தாரீர் என்றழைத்தால், குரலெடுத்தால் கிடைக்கும் பரிசோ உடன் மரணம். வாழ்வதோ அன்றிச்சாவதோ என்ற நிலையில் மக்களின் அங்கலாய்ப்பு இதனுடன் கூடிய மரண ஓலங்கள். மக்கள் மனத்துள் மலைபோன்றெழும் உணர்ச்சிக் கொந்தளிப்பு. இவைகளின் மத்தியில்......,

அதோ! ஒரு மூலையில் அக்கினியின் அகோரமானவெம்மையைத்தாங்காது, அருவி போன்று ஓடும் வியர்வையெனும் வெள்ளத்தின் மத்தியில், அக்கினியோடு ஒன்றிவிட்ட நிலையில் இரும்பை உருக்குவதோடு மட்டுமல்லாமல் தன்னையே உருக்கி உழவு கருவிகளைச் செப்பனிட்டும், குதிரைகளுக்கு லாட மடித்தும் இன்னும் இன்னோரன்ன வேலைகள் எல்லாவற்றையும் செய்துகொண்டிருக்கும் அவனைப் பாருங்கள். அவன் ஒரு கொல்லப்பட்டறைத்தொழிலாளி. ஏழ்மையின் இருப்பிடமாகத்திகழும் அவன் உள்ளத்திலோ படிப்பினுர்வமும், அடிமை விலங்கை அறுத்தொழிக்கும் சிந்தனையும், தாய் நாட்டின் தணியாப் பாசமும் ஒருங்கே குடிகொண்டிருக்கின்றன என்பதை யார் அறிவார்? ஆமாம்! அவன் தான் தொமஸ்மசாரிக்.

ஏழை வண்டியோட்டியான ஜோசப் மசாரிக்கும், எஜமானர் வீட்டுப் பெண்ணான தெரசாவுக்கும் 1850ம் ஆண்டு மார்ச்திங்கள் ஏழாம் நாள் அடிமை மண்ணில் ஒரு புரட்சிக்கனலின் சின்னமாக அவதரித்தார்—ஐந்தறிவு படைத்த விலங்குகளிலும் கீழான முறையில் வதைத்து, ஒடுக்கி, நசுக்கப்பட்டு வாழ்ந்துவந்த அடிமைகள் ''கூலி'' என்று கேட்டால் எப்படியிருக்கும் என்பதை யோசித்துப் பாருங்கள்? இந்நிலைக்கு மசாரிக்கின் குடும்பமும் விதிவிலக்கா? என்ன?

ஏழ்மையின் பிடியில் சிக்கித்துடித்தார். துவண்டார். ஆனால் படிப்பார்வம் மட்டும் குறையவில்லை. மகனின் ஆசையைநிறைவேற்றிவைக்கத் தாய் தெசரா ஓயாது முயற்சிசெய்தாள். அதன் பலன், ஹஸ்டோபெக்கில் வாழ்ந்த அவரின் தாயினுடைய சகோதரி வீட்டிலிருந்து அங்குள்ள பள்ளியொன்றிற்குத் தவறாது சென்று படித்து வந்தார்.

அழுக்கேறியும், கிழித்ததுமான ஆடைகளை அணிந்து சென்றதினால், பலதடவை பலருடைய கண்டனங்களுக்கும், கேலிக்கும் ஆளாகியிருந்தின்றார். என்றாலும் மனத்தை எள்ளளவும் தளரவிடாது முன்னேறினார். முன்னேற மென்மேலும் முயன்றார். முயற்சி பலித்ததா? இல்லவேயில்லை.

பதினாலுவது வயதில் பள்ளிப்படிப்பை நிறுத்திவிட்டு பூட்டுத்தயாரிக்கும் ஒரு பட்டறையில்வேலைக்குச்சேர்ந்து கடுமையாகப்பாடு பட்டார். வேலைக்கஷ்டமும், எஜமானரின் துன்புறுத்தல்களும் அவரை அவ்வேலையில் நிரந்தரமாக நிற்கச் செய்து விடவில்லை. இவ்வேலையைஉடனே கைவிட்டு உள்ளூர் கொல்லப் பட்டறையில் மீண்டும் சேர்ந்து மாடாக உழைத்தார். அங்கிருந்து கொண்டு லத்தீன் பாஷையையும் கற்றுத்தேறினார். இவ்வேலையும் பலநாட்கள் நீடிக்கவில்லை.

கொண்டேயிருந்தார்கள். யூலியஸ் ஸீசர் கூறியது போல், 'அஞ்சியவர்கள் எல்லோரும் சதாமரணம் அடைந்து கொண்டேயிருந்தார்கள். எங்குப்... மரணம்... மரணம்... பயம்... பயம்... என்ற ஓலங்கள்தாம்.

மரணம், பயம்... என்ற ஓலங்களின் மத்தியில் வாழ்ந்த மக்களின் மனங்கள் எல்லாம் இறுகிவிட்டன. ஒன்று சேர்ந்து ஓர்மம் செறிந்துவிட்டன. ஆமாம்! கோழை வீரனாகிவிட்டான். கோழைகள் வீரர் ஆகிவிட்டனர். புரட்சித்தீ காட்டுத்தீ போல பரந்தெழுந்தது. ஆன்ம பலத்தோடும் ஆயுதபலத்தோடும் களம்நோக்கிக் கூட்டணி திரண்டனர் மக்கள்.

மக்களின் தலைவனாக, கத்தோலிக்க மதத்தின் சீர்கேடுகளை, பாதிரிமார்களின் வெளிப்பூச்சுகளை அழித்தொழிப்பவனாக முன்சென்றான் யோன்ஹஸ் என்னும் வீரன். சுண்டெலிப்பட்டாளங்களைக் கண்ட யானைக் கூட்டம் சிரித்தது. ஆணவச் செருக்குடன் பாய்ந்தது. பாய்ந்ததின் பலனைப் பெற்

## இளைய ஈழம்

கஷ்டங்கள் தன்மேல் வந்து மோதுவதைக்கண்டு கலங்காது முயன்றார். புரூனோ நகரின் செல்வந்தரின்பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதன் மூலம் கிடைத்த சிறுதொகையுடன் தன் கல்வியறிவை வளர்க்க முயன்று வெற்றிகாண அயராது பாடுபட்டார். இந்தச் சமயத்தில் தான்......

செக்கோஸ்லாவாகியா, பொகிமியா — ''ஸ்லோவாகியா'' என்றபெயர்களுடன் ஆஸ்திரிய ஹங்கேரிய கூட்டரசின் பிடியில் சிக்கித்தவித்துக்கொண்டிருந்தது. பொகீமிய மக்கள் தங்கள் பகுதியை ஆள அரசபரம்பரையினர் இல்லாமையால், ஜேர்மனியர்களை அரசபரம்பரையினராகக் கொண்டு, அவர்களே நாட்டையாள வழிவிட்டுக்கொடுத்தார்கள் இதன் மூலம் ஜேர்மனியர்களின் படிப்படியான ஊடுருவல் நடைபெற்று, மதம் மாற்றப்பட்டு, 'செக்' மொழி சிதைக்கப்பட்டு...... இன்னும் பல அகோர சம்பவங்கள் நடைபெற்றன.

அதே சமயம், ஜேர்மன் மொழியும், கத்தோலிக்க மதமும் புதுமெருகேற்றப் பட்டன: பிரபுக்கள், அரண்மனைச் சிப்பந்திகள் எல்லோரும் ஜேர்மனியர்களின் கைப்பொம்மைகளாக மாற்றப்பட்டு, ஆட்டப்பட்டனர்: மக்கள் எல்லோரும் பயந்தார்கள். பயந்து

றுக்கொண்டதா? பகீரதப் பிரயத்தனத்தின் பின் பெற்றுக் கொண்டே விட்டது.

யோன்ஹஸ் சிறைப்பிடிக்கப்பட்டு, எத்தனையோ சுதந்திர உள்ளங்கள் கதற உயிருடன் கட்டிவைக்கப்பட்டுக் கொளுத்தப்பட்டார். சுதந்திர வீரனைத் தீ நாக்குகள் அரவணைக்க, சுதந்தித் தீ வெகுண்டெழுந்தது. அதே சமயம் ஆஸ்திரியவாரிசுப் படி 2வது பெர்னண்டு அரியணையில் அமர்ந்தான். பழுத்த கத்தோலிக்கனான அவன் முதன் முதலாக விடுதலைப் படையை நிர்மூலமாக்க விழைந்தான்.

தொமஸ்மசாரிக் அச்சமயம் புரூனோ கல்லூரியின் மாணவராக விளங்கினார். யோன்ஹஸ்சின் மரணத்தால் துயருற்று சுதந்திரத் தாயை மீட்கத் துடித்தெழும் வேங்கை போலானார். கல்லூரியில் மாணவர் படைகளை அமைத்தும், பத்திரிகைகள் மூலமாகவும், சொல்லாற்றல்களாலும் விடுதலைத் தீயைப் பரவவிட்டார். அதே சமயம் நண்பரொருவரின் உதவியால் வியன்னாவிற்குச் சென்று படித்துப் பல கிரமங்களின் மத்தியில் 1876ல் டாக்டர் பட்டமும் பெற்றார்.

படிப்பின் மத்தியிலும், பல நாடுகளுக்கும் தங்கள் நாட்டைப்பற்றி விளக்குவதிலும் பலருடன் கலந்துரையாடுவதிலுமே பொழுதைக் கழித்தார் வேலைதேடி லீப்சிக் நகருக்குச் சென்றபோது, காரிக் என்ற பெண்ணைக் கரம் பிடித்து வியன்னாவிற்குத் திரும்பிவந்து அங்குள்ள பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகக் கடமையாற்றினார்.

அவர் பேச்சிலும், மூச்சிலும் 'செக்' நாட்டின் விடுதலைக் குழவி தவழ்ந்தது. தன்கூற்றை எத்தனையோ வல்லரசுகள் புறக்கணித்தாலும், மனந்தளராது விளக்கிய வண்ணமேயிருந்தார். 1890ல் மக்களின் அமோக ஆதரவுடன் ஆஸ்திரிய பாராளுமன்றத்தின் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுத் திறம்படக் கடமையாற்றினார்.

இதே சமயத்தில் ஆஸ்திரிய இளவரசர் பெர்னண்ட் கொல்லப்பட, 1வது உலக மகாயுத்தமும் ஆரம்பமாகுந் தறுவாயிலிடந்தது. தொமஸ்மசாரிக்கைப் பல பிரச்சினைகள் வாட்டி எடுத்தன: மனந்தளராது நேசநாடுகளின் கரங்களைத் தன்பால் ஈர்க்கப்பண்ண ரஷ்யா, பிரான்சு, முதலிய நாடுகளுக்குச் சென்று அங்கெல்லாம் அனுமதியுடன் 'செக்' நாட்டினரைக் கொண்ட விடுதலைப்படைகளை அமைத்து வீரமுழக்கம் செய்தார்.

ஆஸ்திரிய — ஹங்கேரிய— ஜேர்மன் கூட்டரசுகள் எல்லாம் வீரமுழக்கத்தால் நடுநடுங்கி வலுவிழந்தன. சமாதானத்திற்காகக் காலில் வீழ்ந்தன. ஒன்றுமே வாய்க்கவில்லை. தொமஸ்மசாரிக்கின் தீரமான, ஆணித்தரமான, தாய்நாட்டுப்பற்றுக் கொண்ட வார்த்தைகளினாலும், இடைவிடா முயற்சியினாலும் அமெரிக்காவும், பிரான்சும், ரஷ்யாவும் புதிய செக்கோஸ்லாவாகியாவை அங்கீகரிக்க, தன்மானமிழந்து, புறமுதுகுகாட்டிக் கூட்டரசுகள் அவ்விடயத்தை விட்டு விரைந்தகன்றன.

இடைவிடாத முயற்சியும், ஓயாத சிந்தனையும் புதிய செக்கோஸ்லாவாகியாவின் உதயதாரகையாம் தொமஸ் மசாரிக்கை நோயாளராக மாற்ற விடுதலை அன்னை ஆரத்தழுவி அமுத முத்தமீந்தாள்.

**காசி ஆனந்தன்**
**வண்ணை ஆனந்தன்**
**சிறையில் இன்று**
**527-வது நாள்**

# வழிதேடிச் சென்ற புலவன்

—உடுவை குகதாசன்—



போராடிச் செத்தாலும்
  புகழ் பெற்றுத் தமிழாட்சி
புரிவோம் நாம் எனச் சொன்னவன்!
  பொல்லாத ஆட்சிக்கு
பொரிபோடக் கைதூக்கி
  புறப்பட்டுச் சென்ற தலைவன்!
வேரோடு சாய்கின்ற
  விழலுக்குத் தலைசாய்க்க
விரும்பாது சிறை சென்றவன்!
  விலைபோகும் தமிழுக்கு
விடிவொன்று உண்டென்று
  விழிப்போடு சொன்ன கவிஞன்!
சீரான தமிழ்காக்க
  திடங்கொண்டு எழுந்திங்கு
[illegible] சென்ற தமிழன்!
  தென்[illegible] முன்
திறமைக்கு சான்றாக
  தன்னையே ஈந்த புலவன்!
கூழுண்டு வாழ்ந்தாலும்
  குறள் தந்த வழி கொண்டு
தமிழுண்டு பாடும் கவிஞன்!
  குணமுடைய பொருள்கள் தரும்
குலம் புகழும் கவிதையிசை
  கொடைபெற்று வாழும் கவிஞன்!
தாழாத பணியென்றும்
  தமிழர்கள் வாழ்வுக்கு
தயங்காது செய்யும் தமிழன்!
  தன்னுவி பிரிந்தாலும்
தமிழாவி பிரியாது
  வரங்கேட்டு வந்த கவிஞன்!
வாழ்வாங்கு வாழ்வோம் நாம்
  வையத்தில் எனச் சொல்லி
வழிதேடிச் சென்ற புலவன்!
  வளமாக ஈழத்தில்
வழிகாட்ட உன்போல
  வரவேண்டும் கோடி மாந்தர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீன சோசலிசமும்! சிங்கள சோசலிசமும்!

அன்பு நண்பா,

கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான பயங்கர ஆயுதங்களையும், வெடிமருந்துகளையும் சீனநாடு சிங்கள அரசாங்கத்துக்கு வாரி வழங்கிய நேரத்தில் இந்த ஆயுதங்கள் எல்லாம் எதற்காக இங்கு குவிக்கப்படுகின்றன? இந் நாட்டுக்கும் வேறு எந்த ஒரு நாட்டுக்கும்பகை ஏதுமில்லையே என்று நம்முடைய உடுவில்பா. உ தர்மலிங்கம் அவர்கள் ஒருமுறை தேசிய அரசுப் பேரவையிலே கேள்வியெழுப்பியபோது — அதற்கு பாதுகாப்பு வெளிவிவகார பிரதியமைச்சர் திரு. லக்ஸ்மன் ஜெயக்கொடி அவர்கள் அளித்த பதிலை மறந்திருக்க மாட்டாய்! உன்னால் அதை எப்படி மறந்திட முடியும்? உன்னால் மட்டுமல்ல—விடுதலை உணர்ச்சிகொண்ட எந்த ஒரு தமிழனாலும் மறந்திடமுடியாதே!

ஈழத்தில் ஒற்றையாட்சியை பாதுகாத்திடவே சீனத்திலிருந்து இந்த ஆயுதங்கள்இங்கு குவிக்கப்பட்டிருப்பதாக அன்று அமைச்சர் பகிரங்கமாக கூறினார்!! ஆம் நண்பா, சிங்கள ஒற்றையாட்சியிலிருந்து விடுபட்டு, தங்கள் சுதந்திரத்தைமீட்டுக்கொள்வதற்காகவிடுதலை பெற்ற தமிழ் ஈழநாட்டை நிறுவுவதற்காக தமிழ்த்தேசிய இனம் நடத்துகின்ற உரிமைப் போராட்டத்தினை நசுக்குவதற்கே சீன ஆயுதங்கள் இங்கு குவிக்கப்பட்டிருக்கின்றன என்பதுதான் இதன் வெளிப்படையான கருத்தாகும்!

அமைச்சரின் இந்த அறிவிப்பைக்கேட்டு—மெத்த ஆச்சரியமடைந்தவர்களில் நானும் ஒருவன். ஏனென்றால் சோசலிச நாடு ஒன்று—ஓர் இனத்தின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை நசுக்குவதற்கு எப்படி சிங்கள அரசுக்கு ஆயுத உதவி செய்திடமுன்வந்தது என்பதே என்னுள் எழுந்திட்ட கேள்வியாகும். இதே கேள்வி உண்மையான சோசலிஸ்டுகள் அனைவரது உள்ளங்களையும் கூட குடைந்திருக்கும் என்பதில் துளியும். ஐயமில்லை!

ஆனாலும்—சிங்கள அரசு, தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்கு என்று வெளிப்படையாக சீனவிடம் கூறிஆயுத உதவி கேட்டிருக்காது; தங்கள் ஆயுதங்கள், சிறுபான்மை இனத்தினரின் உரிமைப்போராட்டத்துக்கு எதிராகப்பயன்படுத்தப்படும் என்று தெரிந்திருந்தால், சீனநாடு, சிங்கள அரசுக்கு ஆயுதங்கள் கொடுத்திராது; விஷயத்தை கூறுமலே, சிங்கள அரசு சீனநாட்டிடமிருந்து ஆயுதங்களைப் பெற்றிருக்கலாம்; இதற்காக சீனத்தின்மீது ஆத்திரப்பட்டு பயன் ஏதுமில்லை என்று எனக்குள் சமாதானம் கூறிக்கொண்டேன்!

ஆயினும்—இன்றைக்கு சீனநாட்டில் நடைபெறுவதாக கூறப்படும் சம்பவங்களைப் பார்க்கும்போது — இலங்கைத் தமிழர்களின் இன விடுதலைப் போராட்டத்தை ஒழித்துக்கட்டும் சிங்கள ஆட்சியின் வெளிப்படையான நோக்கத்தைத் தெளிவாகத் தெரிந்துகொண்டுதான் சீனநாடு ஆயுதங்களை அள்ளி வழங்கியிருக்குமோ என்று ஐயுறவு கொள்ளவேண்டியேற்படுகிறது!

சோசலிச நாடு என்று கூறப்படும் சீனத்திலேயே சிறுபான்மை இனங்களை ஒழித்துக்கட்ட சூழ்ச்சிகள் நடைபெறுவதாக கூறப்படுவதைப் பார்க்கும்போது—அதே வேலையை ஈழத்தில் கச்சிதமாகக் செய்துவருகின்ற சிங்கள சோசலிச ஆட்சிக்கு, சீனவின் ஆசிர்வாதமும்ஆதரவும் உதவியும் கிடைத்திடுவதில் ஆச்சரியம் எது?

ஆம் நண்பா, கம்யூனிஸ்ட் சீனவில், சிறுபான்மை இனங்களை ஒழித்துக்கட்டும் முயற்சி தீவிரமாக நடைபெற்றுவருகிறதாம்! இப்படிக் கூறுவது—குற்றம் சுமத்திடுவது—முதலாளித்துவ நாடு எதுவுமல்ல! மற்றோர் கம்யூனிஸ்ட் நாடான சோவியத் ரஷியாவே இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளது!!

அதிலும், சோவியத் ரஷியாவிலுள்ள 'ஏனோதானோக்கள்' — பொறுப்புணர்வு அற்றவர்கள்—அறிவு அற்றவர்கள்—யாரும் இப்படிக் கூறிடவில்லை! சோவியத் எழுத்தாளர்களே இப்படி குற்றம் சுமத்தியிருக்கிறார்கள்! சோவியத் எழுத்தாளர் சங்க அதிகார பூர்வமான "லிற்றறி கசெட்" என்ற ஏடே அண்மையில் சீனநாட்டு ஆட்சியாளர்கள் இவ்வாறு பாரதூரமான குற்றத்தைச் சுமத்தியிருக்கிறது.

"பீக்கிங் ஆட்சியாளர்களுக்கு எதிராக சீனவின் பல்வேறு பகுதிகளிலும் சிறுபான்மை இனமக்கள் தேசிய விடுதலைப் போராட்டங்களை ஆரம்பித்துள்ளனர் இந்த இயக்கங்களை சீனத்துருப்புக்கள் துப்பாக்கிக் குண்டுகளாலும், வாள்களாலும் அடக்கியொடுக்கிவருகின்றன. சீனத்தலைவர்களின் நடவடிக்கைகளினால் இதுவரையில் பன்னிரண்டு பிரிவுக்கு மேற்பட்ட பல இனமக்கள் ஒழிக்கப்பட்டுவிட்டனர்; இக்கொடுமைகள் காரணமாக, எஞ்சியுள்ள வெவ்வேறு சிறுபான்மை இனத்தவர்களும் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள விடுதலைப் போராட்டங்களை ஆரம்பித்திருக்கின்றனர்; சீன இனத்தவர் அல்லாத மங்கோலியர் திபேத்தியர் மற்றும் சிறுசிறு பிரிவினர் அனைவரையும் அழிப்பது அல்லது அவர்களையும் சீன இனத்தினரோடு இரண்டறக்கலக்கச் செய்வது என்ற சதி நோக்குடன் பீக்கிங் ஆட்சி செயல்படுகிறது"

நண்பா, சீனவில் நடக்கும் சிறுபான்மை இன ஒழிப்பு பற்றி இப்படி எழுதுகின்ற சோவியத் பத்திரிகை, திபேத்தில் சென்ற ஆண்டு ஓர் தேசிய இன எழுச்சி தோன்றியதாகவும், அதை சீன ஆட்சியாளர்கள், பன்னீராயிரம் திபேத்தியர்களைக் கொன்று குவித்து அடக்கியொடுக்கிவிட்டதாகவும் குற்றம் சுமத்தியிருக்கிறது!

பார்த்தாயா, பொதுவுடமை என்னும் போர்வையுடன் சீனத்தில் நடைபெறுகின்ற கோரத்தனத்தை! இப்படி சொந்த நாட்டிலேயே சிறுபான்மை தேசிய இனங்களை கொன்றொழித்துவரும் சீனத்து ஆட்சி, ஈழத்திலும் சிறுபான்மை தேசிய இனமான தமிழினத்தை ஒழித்துக்கட்டும் வேலையில் ஈடுபட்டிருக்கும் சிங்கள ஆட்சியாளர்களுக்கு உதவி புரிந்திடுவதையும், அனுதாபமும் ஆதரவும் காட்டுவதையும் நம்மால் புரிந்திடமுடிகிறதல்லவா? சீனத்திலும், சோசலிசப் போர்வையின் கீழ் இன ஒழிப்பு! ஈழத்திலும், சோசலிசப் போர்வையின்கீழ் இன ஒழிப்பு!! ஏனைய இனங்களை அடக்கி நசுக்குவதில் சிங்கள ஆட்சியும், சீன ஆட்சியும். ஒத்த உணர்வினராக இருந்திடும் போது—அவர்களுக்கிடையே நெருங்கிய நட்பு இருந்திடுவதில் ஏது ஆச்சரியம்!

சீன இனத்தவர் அல்லாத ஏனைய இனத்தவர்களை அழிப்பது அல்லது — அவர்களையும் சீன இனத்தினரோடு இரண்டறக்கலந்திடச் செய்வது — சீனத்தின் கொள்கை! தமிழ் இனத்தை அழிப்பது — அல்லது அவர்களையும் படிப்படியாக சிங்கள பௌத்தர்களாக்கி விடுவது சிங்களத்தின் கொள்கை!! சீன ஜாடியென்றால், அந்த ஜாடிக்கு ஏற்ற மூடியாக இருக்கிறது இலங்கை!! சீனம் அண்ணன் என்றால் சிங்களம் அதன் தம்பி எனும் நிலைமை தோன்றியிருக்கிறது இங்கு!

நண்பா, சீனத்தில் நடைபெறுகின்ற இன ஒழிப்பு முயற்சிகளை அம்பலப்படுத்திக் கண்டித்திட முன்வந்திருக்கும் சோவியத் ஏடு, ஈழத்தில் நடைபெறுகின்ற தமிழின ஒழிப்பு முயற்சிகளுக்கு எதிராககண்டனம் எழுப்பிடவில்லையே என்று நீ கேட்டிடக் கூடும்! இதற்குக்காரணமே நாம் தான்! இங்கு நடைபெறுகின்ற இன ஒழிப்பு நடவடிக்கைகளை வெளி நாடுகளுக்கு அம்பலப்படுத்தி, வெளி நாடுகளின் ஆதரவையும் அனுதாபத்தையும் பெறுகின்ற முயற்சியிலே தமிழின விடுதலை இயக்கம் இன்னும் பூரணமாக தன்னை ஈடுபடுத்திக்கொள்ளவில்லையே!

மாஸ்கோவில் நடைபெற்றதே அண்மையில் உலக சமாதான மாநாடு—இந்த மாநாட்டுக்கு செல்லவிருந்த நம்முடைய உடுவில பா. உ. தர்மலிங்கம் அவர்களுக்கு, அங்கு செல்ல அனுமதி மறுத்தது இலங்கை அரசு! இதற்குக் காரணம், அவர் இந்நாட்டுத்தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்குப் போராடுகின்ற இயக்கததைச் சேர்ந்தவர் என்பதுதான்! வெளி நாட்டுக்கு — ரஷியாவுக்கு — சென்றால், ஈழத்தில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்படுகின்ற அநீதிகளை—தமிழின ஒழிப்பு நடவடிக்கைகளை—எங்கே அம்பலப்படுததி விடுவாரோ என்கின்ற அச்சம் அரசுக்கு! குற்றமுள்ள நெஞ்சங்கள் குறுகுறுத்திடத்தானே வேண்டும்!

ஆனாலும் கூட-ரஷியாவுக்கு செல்லவிருந்த தர்மலிங்கம் அவர்களை அங்கு செல்லவிடாது சிங்கள அரசு தடுத்துவிட்டதென்றால் — அது குறித்து ஏன் என்றுசிந்தித்திடமாட்டாதாஇங்குள்ள ரஷியத்தூதரகம்? உடுவில் பா.உ. தர்மலிங்கம், ரஷிய—இலங்கை நட்புறவுச் சங்கத்தின் தலைவரும் கூட! அப்படிப்பட்டவருக்கு ரஷியா செல்வதற்கு இலங்கை அரசு அனுமதி மறுத்ததென்றால்—அதன் காரணத்தை துருவி ஆராய்ந்திட மாஸ்கோ முயன்றிடாதா? அப்படி முயலும்போது தமிழ் இனத்துக்கு எதிராக நடைபெறும் கொடுமைகளில் இதையும் ஒன்றாக மாஸ்கோ கணக்கெடுக்காது என்பது என்ன நிச்சயம்! ஈழத்தமிழனுக்கு எதிராக நடைபெறும் அக்கிரமங்களை இரும்புத்திரை போட்டு எத்தனை நாளைக்கு மறைக்கமுடியும்? எனவே நண்பா, அரசின் இத்தகைய கெடுபிடிகளால், நம்முடைய விடுதலை இயக்கம் மேலும் மேலும் வளருமே தவிர தளர்ச்சியடைந்துவிடாது!!

வங்கதேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையைப் பாதுகாத்திடத் தோள்கொடுத்த சோவியத்ரஷியா, ஈழத்துத்தமிழ்த்தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைப்போராட்டத்துக்கு ஆதரவு தந்திட முன்வராது என்று யாரும் சோவியத்திடம் கூற முடியாது! ரஷியா மட்டுமல்ல — பல வேறு நாடுகளின் ஆதரவையும் அனுதாபத்தையும் நம்முடைய விடுதலைப்போராட்டத்தின் பாய் திருப்புவது நமது கரங்களிலேயே —நமது முயற்சியிலேயே — நமது தியாகத்திலேயே—பெரிதும் தங்கியிருக்கிறது!

இன்றைக்கு ஏராளமான ஈழத்தமிழர்கள் வெளிநாடுகளிலே இருக்கிறார்கள் — இவர்கள் தமிழ் விடுதலை உணர்வுடன், தமிழ் ஈழத்தை விடுவித்திடவேண்டும் என்கின்ற தணியாத உணர்ச்சியுடன் — தங்கள் தாயகத்தின் அடிமைத்தளைதனை அறுத்திட செய்திடக் கூடிய பணிகள் ஏராளமாக உண்டு!

இந்திய சுதந்திரப்போராட்ட காலத்தில் — இங்கிலாந்தில் திரு. வி. கே. கிருஷ்ண மேனன் போன்றோர் தலைமையில் இயங்கிவந்த இந்திய விடுதலை இயக்கம், இந்திய விடுதலைக்கு பெரிதும் துணைபுரிந்ததை யாரும் மறுத்திட முடியாது! அதே போல, இன்றைக்கு வெளி நாடுகளிலே வாழுகின்ற ஈழத்தமிழர்கள்—இலங்கையில் நடைபெறுகின்ற இனக்கொலை முயற்சிகளை — தமிழ் ஈழ சுயாட்சிக்கோரிக்கையை—ஈழத்தமிழர் விடுதலைப்போராட்டத்தைப் பற்றியெல்லாம், தாங்கள் வாழுகின்ற நாடுகளில் வெளிவருகின்ற பத்திரிகைகளிலே எழுதலாம்; தாங்கள் வாழும் நாடுகளின் அரசாங்கங்களுக்கு எடுத்துச்சொல்லலாம்; 'இலங்கைத்தமிழர் விடுதலை இயக்கம்' என்று ஓர் அமைப்பையே தோற்றுவித்து இயங்கலாம்; ஈழத்தமிழர்களின் இலட்சியப்போர் பற்றி ஆங்கிலத்தில் சிறு சிறு பிரசுரங்கள் பதிப்பித்து வெளிநாடுகளில் பரப்பலாம்—இப்படி தேசிய உணர்வுடன் விடுதலைப் போராட்டம் வேகம் பெற்றிட செய்யக்கூடிய பணிகள் ஏராளமுண்டு!

ஈழத் தமிழர்கள் எந்த நாட்டில் வாழ்ந்தாலும், தமிழ் ஈழ விடுதலையை தங்கள் உயிர் மூச்சாக—அடிப்படை இலட்சியமாகக் கொண்டு பணியாற்றிட முன்வந்திடவேண்டும்!

## அரசியல் மேடை

நண்பா, வெளிநாடுகளில் வாழுகின்ற ஈழத் தமிழர்கள் நம்முடைய விடுதலை இயக்கத்துக்கு எப்படித்தான் வேகம் சேர்த்திடினும்—இங்கு நாம் நம்மை இந்த இலட்சியத்துக்கு பூரணமாக ஒப்படைக்காவிடின், நமக்கென்றோர் தாயகத்தை அமைப்பதென்பது வெறும் பேச்சோடும், எழுத்தோடும், எண்ணத்தோடும் மறைந்து விடும்!

நாம் அடிமையாகவாழ்ந்திட மாட்டோம் — ஆண்டபரம்பரையினர் நாம் — நமக்கென்றோர் தாயகம் உண்டு — அதன் பெயர் தமிழ் ஈழம் — அந்தத் தமிழ் ஈழத்தில், நாம் நமது ஆட்சியை அமைத்தே தீருவோம் — இந்தப் பணிக்காக எதையுமே தியாகம் செய்திடுவோம் — என்கின்ற தமிழ்த் தேசிய உணர்ச்சி நம்மவர் ஒவ்வொருவரது நெஞ்சங்களிலும் பற்றிப்பிடித்திட வேண்டும்! விடுதலைக் கனல் மூண்டெழவேண்டும்!

நம்முடைய சுதந்திரத்துக்காக நாம் செய்கின்ற தியாகம் தான்—நாம் கொட்டுகின்ற நமது தியாக ரத்தம்தான்—நமது இலட்சியத்தில் நாம் கொண்டிருக்கின்ற உறுதிதான்—வெளிநாடுகளின் ஆதரவையும், அனுதாபத்தையும் நம்மீது திருப்பிவிடக்கூடிய ஒரே ஒரு கருவியாகும்! வங்கநாட்டுமக்கள்தங்கள்சுதந்திரத்துக்காக, மெய்சிலிர்த்திட வைத்திடும் தியாகங்களைப்புரிந் திடாவிடின்—இந்தியாவோ, ரஷியாவோ அவர்களது இலட்சியம் வென்றிட துணைபுரிந்திருக்குமா?

இந்த இலட்சிய உறுதியையும், தியாகஉள்ளத்தையும் வளர்க்கும் பணியிலே தான், நம்முடைய தமிழ் இளைஞர் பேரவையினர்-தமிழ் ஈழத்தின் தங்கத்தம்பிகள் — இப்போது ஈடுபட்டுவருகிறார்கள்! இரவென்றும் பகலென்றும் பனியென்றும் மழையென்றும் வெயிலென்றும் காற்றென்றும், பாராது அவர்கள் தமிழ் ஈழத்தில் நடத்தி வந்த உண்ணுவிரதம், பெரும் பயனைக் கொடுத்திருக்கிறது என்பதை எவரும் மறுத்திடமுடியாது!!

ஈழத்தமிழனுக்கு தனியொரு தாயகம் காணுகின்ற பெரும்பணியில் முன்னோடிகளாக விளங்கிடவேண்டியது இளைய தமிழ்ச் சமுதாயமே! அந்தப்பெரும் பொறுப்பை உணர்ந்து—தங்களை, தங்கள் வாழ்வையே அழித்துக் கொள்ளநேர்ந்திடினும் விடுதலையைப்பெற்றே தீருவது என்று உறுதி பூண்டிருக்கும் தியாகத் திருவிளக்குகளாக நம்முடைய இளைஞர்கள் இன்றைக்கு வேகமாக உருவெடுத்து வருவது கண்டு உள்ளமெல்லாம் உவகை பூக்கிறது!

இந்த வீரத்தமிழ் இளைஞர்களின் தியாகஉணர்வுக்கு முன்னால்— சீன ஆயுதங்கள் எம் மாத்திரம்?

உன் அன்புத்தோழன்.

கோவை-மகேசன்

# எண்ணம்

## அரிசி விலை உயர்வும் வாந்திபேதியும்!

பஞ்சமும் நோயும் நின்மெய்யடியார்க்கோ? என்று அன்று சுதந்திரத்தாயை நோக்கி — இந்திய சுதந்திரப் போராட்ட காலத்தில்—இந்திய விடுதலைக்கவிஞன் சுப்பிரமணிய பாரதி உள்ளமுருகப்பாடினன்! இன்றைக்கு, இந்நாட்டில் சுதந்திரத்துக்காகப் போராடி வருகின்ற தமிழ் ஈழ மக்களை பஞ்சமும் பட்டினியும், அத்துடன் நோயும் சேர்ந்து வாட்டிவருவதைப் பார்க்கும் போது — பாரதியின் மேற்கண்ட பாடலே நம் சிந்தையில் வருகிறது!

சிங்கள ஆட்சியாளர்களின் அரிசி வெட்டினாலும் மாவின் விலையைக் கூட்டி அதைக்கட்டுப்படுத்தியதினாலும், ஏனைய பொருட்களின் விலை உயர்வினாலும், பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் தமிழ் மக்களேயென்பதை இன்று நடைமுறையில் காண்கின்றோம்!

இந்நாட்டின் எழுபது சதவீத வருமானத்தை உழைத்துத் தந்துகொண்டிருக்கும் 15 இலட்சம் மலையகத் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள், உணவுப் பொருட்கள் வெட்டின் பயனாக இன்றைக்கு அரைப்பட்டினியும் முழுப்பட்டினியுமாக வாடிக்கொண்டிருக்கிறார்கள். ஒட்டிய வயிறும் உலர்ந்தவாயுமாக—உணவின்றி அவர்கள் இன்றுபடுகின்ற கஷ்டத்தை காணுகின்ற எவரும் கண்ணீர்வடிக்காமலிருந்திடமுடியாது.

இதேபோல—யாழ்ப்பாண மாவட்டத்தில் வாழும் ஏழு இலட்சம் தமிழ் மக்கள், இருபக்கங்களால் இன்று தாக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். காலரா என்று சொல்லப்படும் நோய் ஒரு பக்கம்; அரிசி விலை ஏழு ரூபாவரை உயர்ந்துள்ளதால், உணவுக்கு திண்டாடும் நிலை மறுபக்கம்! உரலுக்கு ஒரு பக்கம் இடி—மத்தளத்துக்கு இரு பக்கமும் இடி என்று கூறப்படுவதுபோல—யாழ்ப்பாண மக்கள் இன்று படுகின்ற கஷ்டங்கள் சொல்லுந்தரமன்று!

தமிழ் மக்கள் படுகின்ற இந்தக் கஷ்டங்களை—துன்பங்களை, தேசிய அரசுப் பேரவையில் உடுவில் பா. உ. திரு. வி. தர்மலிங்கம் அவர்களும் சாவகச்சேரி பா. உ. திரு. வி. என். நவரத்தினம் அவர்களும் சுட்டிக்காட்டிய போது அரசாங்கத்தரப்பிலிருந்து, ஆதரவான, அனுதாபமான எந்த ஒரு பதிலையும் நாம் காணமுடியவில்லை!

'காலரா' நோயாலும்—அந்த நோயை விட, அந்த நோயையொட்டி அரசு வகுத்துள்ள சட்டதிட்டங்களாலும் கட்டுப்பாடுகளாலும் யாழ்ப்பாண மக்கள் படுகின்ற தொல்லைகளை தமிழர் கூட்டணி பா. உ.க்கள் சுட்டிக்காட்டியபோது அதற்கு டாக்டர் என். எம். பெரேரா என்ன கூறியிருக்கிறார் தெரியுமா?

"உங்கள் மக்கள் தானே இந்த நோயைக்கொண்டு வந்தவர்கள்? அதனால் அவர்கள் துன்பத்தையும் அனுபவிக்கத்தானே வேண்டும்? இந்த நோய் தென்னிலங்கைக்கு பரவ நாம் அனுமதிக்க முடியாது" என்று கூறியிருக்கிறார்! — இதிலிருந்து ஒரு விடயம் தெரிகிறது — தமிழ் மக்கள் வேறு — தங்கள் மக்கள் வேறு — என்பதை நாசூக்காக எடுத்துக் காட்டிவிட்டார், நிதியமைச்சர்!!

எந்த நோயையும் யாரும் விரும்பியோ, தேடியோ, தெரிந்தோ — கொண்டு வருவதில்லை: அது எப்படியோ தெரியாமல் தொற்றிவிடும் ஒன்று. இந்த 'காலரா' என்று சொல்லப்படும் நோய் 1964ம் ஆண்டிலேயே வந்திருக்க வேண்டிய ஒன்று என்றும் வரட்சிக்காலங்களில் இந்த நோய் தோன்றக்கூடிய தென்றும் டாக்டர் என். எம். பி. மெண்டிஸ் கூறியுள்ள கருத்தை டாக்டர் என். எம். பெரேராவுக்கு சமர்ப்பிக்கிறோம்!

காலராவாலும்— அதையொட்டி அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளினாலும் தமிழ் மக்கள் படுகின்றதொல்லைகளை சுட்டிக்காட்டினால், அதை அனுதாபத்துடன் செவிமடுத்து, அக்கஷ்டங்களைப் போக்குவதற்கு நடவடிக்கையெடுக்க முன்வராமல்—தமிழ் மக்கள் தானே காலராவைக் கொண்டு வந்தவர்கள்; அவர்கள் துன்பப்படத்தானே வேண்டும் என்ற ரீதியில் பேசுவது பொறுப்புள்ள ஓர் அமைச்சருக்கு அழகானது அல்ல!

இதே போல—யாழ்ப்பாணத்தில் கொடூரமாக அரிசி விலை உயர்ந்துள்ளதால் அங்குள்ள மக்கள் படும் தொல்லைகளை உடுவில் பா. உ. எடுத்துக்கூறியபோது — ஏழு ரூபா விலைக்கு வாங்குவதற்கு யாழ்ப்பாண மக்களிடம் பணம் இருப்பதாகவும், யாழ்ப்பாண விவசாயிகள் பணக்காரர்கள் என்றும் நிதியமைச்சர் குறிப்பிட்ட குத்தல் கருத்துக்கள் வெந்த புண்ணில் வேல் சொருகுவது போன்றதாகும்!

யாழ்ப்பாண விவசாயிகள் ஒரு சிலரிடம் பணம் இருக்கலாம்—இந்தப் பணத்தை அவர்கள் சம்பாதித்தது 'கிரிதர ஆலை'களினால் அல்ல; தங்கள் இரத்தத்தையும் வியர்வையும் சிந்தி ஓடாக உழைத்து அவர்கள் சிறிதளவு பணம் சேர்த்திருக்கலாம். ஆனால் அதற்காக யாழ்ப்பாண மக்கள் எல்லோருமே பணம்படைத்தவர்கள் என்றோ—அல்லது ஏழு ரூபா கொடுத்து அரிசிவாங்கும் சக்திபடைத்தவர்கள் என்றோ பொறுப்புள்ள ஒரு நிதியமைச்சர் எப்படி கருதுகிறார் என்று நமக்குப் புரியவில்லை.

எனவே நிதியமைச்சர்—இத்தகைய குத்தல் கணைகளால் தமிழ் மக்களின் இதயங்களை மேலும் புண்ணுக்குவதை விடுத்து—யாழ்ப்பாண மாவட்ட மக்களுக்கு நியாய விலையில் அரிசி கிடைப்பதற்கு காமதமின்றி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

எந்தத் துன்பமும், தொல்லையும் சூழ்ந்தாலும் — தமிழ் மக்களின் சுதந்திர உணர்ச்சி என்றைக்குமே மங்காது; மறையாது; மேலும் மேலும் கொழுந்துவிட்டெரியும் என்பதும் உறுதி!

# செல்லையா குமாரசூரியரின் சிங்க(ள)க் கொடிப் பக்தி!

தம்முடைய சிங்கள தேசிய உணர்ச்சியையும், சிங்கள எஜமானர்கள் மீது தாம் கொண்டுள்ள விடுதல் அறியா பெருவிருப்பையும், பகிரங்கமாக எடுத்துக் காட்டுவதற்கு தபாலமைச்சர் செல்லையா குமாரசூரியருக்கு சென்றவாரம் தேசிய அரசுப் பேரவையில் ஓர் அருமையான வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, தமது அரசியல் அடிமைப் புத்தியையும், எஜமான விசுவாசத்தையும் பட்டவர்த்தனமாகக் காட்டிக் கொண்டு விட்டார் அவர்.

ஆம், குமாரசூரியருக்கு, இந்த சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தவர் உடுவில் பா. உ. திரு. வி. தர்மலிங்கம் அவர்கள்தாம்; சிங்கக்கொடியையும், தேசிய கீதத்தையும், தமிழரசுக் கட்சி தொடக்கத்திலிருந்தே ஏற்றுக்கொள்ளவில்லையென்பதையும், தொடர்ந்தும் அதை ஏற்காது என்பதையும், தமிழ் மக்கள் தனிக் கொடி வைத்து ஆட்சிபுரிந்த பரம்பரையினர் என்பதையும், சிங்கக் கொடியால் தமிழ் மக்கள் முன் எப்போதுமே ஆளப்பட்டது கிடையாது என்பதையும் உடுவில் பா. உ. திரு. தர்மலிங்கம் உறைப்பாக தேசிய அரசுப் பேரவையில் எடுத்துக் கூறிய போது — சிங்களப் பிரதிநிதிகள் யாரும் அதற்கு எதிராக அவ்வளவு காரசாரமாக கொதித்தெழும்பவில்லை; குமாரசூரியரே குதித்தெழுந்தார்.

தன்னுடைய சிங்கள தேசிய விசுவாசத்தைக் காட்டி சிங்களத் தலைவர்களிடம் 'நல்ல அடிமை' என்னும் பட்டத்தைத் தட்டிக்கொள்வதற்கு அது ஒரு நல்ல சந்தர்ப்பம் அல்லவா? விடுவாரா பின்னே!

தன்னுடைய பேச்சின் போது, சுமார் பத்து நிமிட நேரத்தை இந்த சிங்களக் கொடி விவகாரத்தின் மீதே செலவிட்டார். தமிழ்க் குடிமக்களின் உரிமையையும் மானத்தையும் விட, சிங்களக் கொடியை போற்றுவதே தமது தலையாய புனிதத் தொண்டு என்பதை வெளிப்படையாகக் காட்டி சிங்களத் தலைவர்களிடம் 'அப்ளாஸ்' பெற முயன்றார்!

ஒரு சட்டம் உருவாக்கப்படும்போது அதை எதிர்க்கிறோம்; ஆனாலும் அச்சட்டம் நிறைவேறி விடுகிறது; அதன்பின், வேறு வழியின்றி நிர்ப்பந்த நிலையில், அதை அனுசரித்து வாழ வேண்டி ஏற்படுகிறதே தவிர — ஏற்றுக்கொண்டு அல்ல!

அதே போலத்தான், சிங்கக்கொடி விவகாரம், சிங்களம் மட்டும் சட்டம், புதிய அரசியல் சட்டம், எல்லாம். சிங்கக்கொடி தேசியக் கொடியாவதை எதிர்த்தோம் — ஏற்றுக்கொள்ளமறுத்தோம் ஆனால் அது பின்னர் தேசியக் கொடியாக ஏற்றுக் கொள்ளப்பட்டு பல வந்தமாக திணிக்கப்பட்டது! இதன் பொருள் தமிழ் மக்கள் அதை ஏற்றுக்கொண்டார்கள் என்பதல்ல—வேறு வழியின்றி அதன் கீழ் வாழ்கிறார்கள். சிங்கள மக்களின் கொடியாக அதை மதிக்கிறார்களே தவிர தங்கள் கொடியாக ஏற்றிடவில்லை!

தேசிய அரசாங்க காலத்தில், தேசிய அரசாங்கத்தில் சேர்ந்தபொழுது, சிங்கக் கொடியை ஏற்கவேண்டுமென்று, தமிழரசுக்கட்சிக்கு நிபந்தனை ஏதும் போடப்படவுமில்லை; தமிழரசுக் கட்சி அதை ஏற்கவுமில்லை!

'தேசிய அரசு' ஒன்றை அமைப்பதற்கு தமிழரசுக் கட்சி அன்று யூ. என். பிக்கு நிபந்தனையுடன் கூடிய ஆதரவு கொடுத்ததே தவிர — தமிழ் மக்களின் உரிமையைப் பறிக்கும் புதிய அரசியல் சட்டம் ஒன்றைக் கொண்டு வருவதற்கு எந்தக்கட்டத்திலும் ஆதரவு கொடுத்ததில்லை! எனவே யூ. என். பி. யுடன் சேர்ந்திருந்தபோது, அதை ஏற்றீர்கள், இதை ஏற்றீர்கள் என்று பேசுவது அர்த்தமற்றது; இன்றைய நிலையுடன் அன்றைய நிலையை ஒப்பிட்டுக்காட்டுவது — அரசியல் புரியாத பேடிகளின் வேலையாகும்!

இன்று — புதிய அரசியல் சட்டம் கொண்டுவரப்பட்டு தமிழ் மக்கள் நிரந்தர அடிமை நிலைக்கு தள்ளப்பட்டிருக்கும் நிலையில், தேசியம், ஒருமைப்பாடு, என்று பேசுவது அர்த்தமற்றது. தேசியம், ஒருமைப்பாடு, நின்று நிலைக்க வேண்டுமென்று கருதியிருந்தால், சிங்களவர்கள் இன்றைய அரசியல் சட்டத்தைக் கொண்டு வந்திருக்க மாட்டார்கள்.

எனவே இந்நாட்டில், இன்றைக்கு ஒரு தேசியம் இல்லை இரண்டு வெவ்வேறு தேசியங்கள் உண்டு. ஒன்று தமிழ்த் தேசியம், மற்றது சிங்களத் தேசியம் தபாலமைச்சர் குமாரசூரியர் விரும்பினால், தமிழ்த் தேசியத்தை தாரைவார்த்து சிங்களத் தேசியத்துடன் இரண்டறக் கலக்கட்டும்! ஆனால் தமிழ் மக்கள், தங்கள் தேசிய தனித்துவத்தை— அத்தனித்துவத்தின் சின்னமான சுயாட்சி உரிமையை, சொந்தக் கொடியுரிமையை, ஒரு போதும் விட்டுக்கொடுக்க மாட்டார்கள்!

# தமிழில் நீதிமன்ற நிர்வாகம் நடைபெறாமல் செய்யச் சதி!

## உடுப்பிட்டி பா. உ. அம்பலப்படுத்துகிறார்!

நீதித்துறையில் அரசினரால் தமிழ் மக்களுக்கு மற்றுமோர் இடிவிழுந்துள்ளது. ஏற்கனவே தமிழ் மக்களுக்கு இலங்கையில் நீதிமன்றத்தில் முழு உரிமையும் வழங்கிவிட்டதாக பிரசாரம்செய்து வரும் அரசு தற்போது, இருக்கின்ற கொஞ்ச நஞ்ச உரிமைகளையும் குழிதோண்டிப் புதைத்து விடும் கைங்கரியத்தில் ஈடுபட்டுவருகின்றது.

தற்போது தமிழ்ப்பகுதிகளில் சில நீதிமன்றங்களில் வழக்குகள் தமிழில் நடைபெற்றுவருவதைக் கண்டு பொறுக்காத அரசாங்கம் தனது சூழ்ச்சிகளை, சூழ்ச்சிப் படலங்களை வெகு சாதுர்யமாக நிறைவேற்றத் தலைப்பட்டுள்ளது.

பிள்ளையைக் கிள்ளிவிட்டு தொட்டிலையும் தாலாட்டும் செயல் போன்று தனது வேலையை ஆரம்பித்துள்ளது.

இதிலே முதலாம் படியாக தமிழ்ப் பகுதியில் வெகு திறமையாகவும், அழகாகவும் வழக்குகளை நடாத்த உதவுகின்ற கோர்ட் காரியதரிசிகளையும் தலைமைக் காரிய தரிசியையும் விவசாய, நீர்ப்பாசன இலாகாவிற்கு இடமாற்றம் செய்யவுள்ளது.



யாழ் மாவட்டத்தில் உள்ள சகல நீதிமன்றங்களிலும் உள்ள (மாவட்ட, மாஜிஸ்திரேட்) கோர்ட் காரியதரிசிகளை தக்கதகுந்த காரணமின்றி இடம் மாற்றம் செய்யவுள்ளது. இது ஒரு திட்டமிட்ட தமிழர்களைப் பதவியில் இருந்து இறக்கும் செயலாகும்.

இந்த நிலையினால் தமிழ்ப் பகுதியில் உள்ள நீதிமன்றங்களில் தமிழில் வழக்குநடாத்தும் பிரச்சினையை உருவாக்கி கோர்ட் நடவடிக்கைகளை ஸ்தம்பிக்கச் செய்யவும் கூடும் அல்லவா?

சரி இனிமேல் கோடுகளில் வரும் புது ரிஜிஸ்ரார்கள் (புதிய நீதிமன்றச் சட்டப்படி கோர்ட் காரியதரிசிகள் ரிஜிஸ்ரார் என்றே அழைக்கப்படுவர் என்பது குறிப்பிடத்தக்கது) தமிழ் மொழியில் கோடு நடாத்த நல்ல ஒத்துழைப்புக் கொடுப்பார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கமுடியும்? அவர்களுக்கு நீதிமன்ற விவகாரம் தான் சரிவரப் புரியுமா? அனேகமாக அப்படியாக வரும் ரிஜிஸ்ரார்கள் அரசின் கைப்பொம்மையாகவும் இருக்கலாம்.

எனவே இது ஒரு திட்டமிட்ட சதியேயாகும் என எண்ண இடமுண்டு. அத்துடன் இனிமேல் தமிழ் பேசும் நீதவான்களையும் எமதுபகுதியில் இருந்து இடமாற்றம் செய்யக்கூடும் அல்லவா? தமிழ் தெரியாத நீதவான்களை எமது பகுதிக்குஅனுப்பி வைத்து மேலும் மொழி நெருக்கடியையும் அரசு ஏற்படுத்தக் கூட முயற்சிசெய்யலாம்.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவுப் பகுதிகள் யாழ் மாவட்டத்துடன் சேர்ந்த பகுதிகளாகும் இங்குள்ள நீதிமன்றங்களில் பாரப்படுத்தப்பட்டு வருகின்ற வழக்குகள் அப்பீல் செய்யும் போது யாழ்ப்பாணம் சுப்பிரீம் கோட்டிற்குப் பாரப்படுத்தப்படுகின்றன. ஆனால் அரசு இனி எடுக்கும் நட

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய அரசுப் பேரவையில்....!

திரு. தர்மலிங்கம்:- 'ஏழு ரூபாய்க்கு ஒரு கொத்து அரிசி வாங்கி உண்ணவேண்டிய நிலையில் இன்று யாழ்ப்பாண மக்கள் இருக்கின்றனர்...'

டாக்டர் என். எம்:- இப்படி வாங்குவதற்குப் பணம் இருப்பதால்தானே அவர்கள் ஏழு ரூபாகொடுத்து ஒரு கொத்து அரிசி வாங்கிச் சாப்பிடுகிறார்கள்!

தர்மலிங்கம்:- அவர்கள் தமது நகைகளை, தட்டு முட்டுச் சாமான்களை, அடகு வைத்து, பணம் பெற்றே இப்படி அரிசி வாங்கிச் சாப்பிடுகிறார்கள்!

ஒரு குரல்:- அடவு வைத்துப் பணம் பெறவும் அங்கு பணம் இருக்கின்றதே...!

தர்மலிங்கம்:- என்னசெய்வது? உயிர் அவ்வளவு முக்கியமானதுதானே! ஏழை விவசாயிகள் இந்த நிலைமையில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

என். எம்:- அவர்கள் ஏழை விவசாயிகள் அல்ல—பணக்கார விவசாயிகள்!

தர்மலிங்கம்:- தற்போது வெங்காயம் யாழ்ப்பாணத்திலிருந்துவெளியேகொண்டு செல்லமுடியாது! அதற்குத் தடைவிதிக்கப் பட்டுள்ளது. காரணம் வாந்திபேதிநோய்! இதனால் அங்கு விவசாயிகளிடம் பணம் இல்லை!

ஃ ஃ

தர்மலிங்கம்:- நாட்டின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உணவு உற்பத்தியை மேற்கொள்ளும் பொறுப்பு பொதுமக்களின் செல்வாக்கு அற்றவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இதனால் உணவு உற்பத்தி எதிர்பார்க்கும் அளவு வெற்றி பெறுமா என்று சந்தேகிக்கவேண்டியுள்ளது.

ஆ. தியாகராசா:- நல்லூர் எம். பிக்கு விவசாயத்தில் உங்களைவிட கூடிய ஞானம் உண்டு!

தர்மலிங்கம்:- நான் சொல்வது என்னவெனப்புரியாதுநண்பர் தடுமாறுகிறார். நல்லூர் பிரதிநிதிக்கு விவசாயம் பற்றி நல்ல ஞானம் இருக்கலாம்! நான் அதைப் பற்றிப்பேசவில்லை! ஆனால் அவருக்கு மக்களிடம் செல்வாக்கு இல்லை! அதைத்தான் கூறுகிறேன்.

'யாழ்ப்பாணத்து விவசாய அரசியல் அதிகாரியிடம் (திரு. அருளம்பலத்திடம்) ஒரு இளைஞர் சென்று விவசாயம் செய்யக் காணி வேண்டும் என்று கேட்டார். அதற்கு அந்த அதிகாரி, தனது கட்சியான முற்போக்கு காங்கிரஸ் உறுப்பினர் விண்ணப்பபத்திரத்தை தாக்கி இளைஞரிடம் கொடுத்தார். அந்த விண்ணப்பபத்திரத்தில் உறுப்புரிமைப் பணம் ரூபா ஒன்று என்றும், ஆயுள் சந்தா ரூபா 20/- என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. நன்கொடை என்று ஒரு இடம் குறிப்பிட்டு நிரப்புவதற்கு இடம் விடப்பட்டிருந்தது. எதற்கு எந்த நன்கொடையோ தெரியவில்லை. ஒருவேளை காணியைகொடுப்பதற்கு நன்கொடையோ என்று தெரியாது!

அருளம்பலம்:- இதை நான் மறுக்கிறேன்.

தர்மலிங்கம்:- அந்த இளைஞர் எழுதிய கடிதம் என்னிடம் இருக்கிறது. அவருடைய பெயரை நான் இங்கு வெளியிட்டால் அவருக்கு தொல்லைகள் விளையலாம். அதனால் அதை வெளியிட விரும்பவில்லை. வேண்டுமானால், அக்கடிதத்தை நான் நிதியமைச்சரிடம் கொடுக்கிறேன். அவர் விசாரித்துப் பார்க்கட்டும்! (கடிதத்தை நிதியமைச்சரிடம் கையளித்தார்)

ஃ ஃ

திரு. வி. என். நவரத்தினம்:- 'காலரா' என்று கூறப்படுவது பற்றித்தான் இங்கு பிரச்சினை எழுப்புகிறேன். சமீபத்தில் யாழ்ப்பாணம் முழுவதும் காலரா நோய்ப் பிரதேசமாக்கப்பட்டது. அங்கிருந்து வெளியே செல்பவர்களுக்கு 'எக்சிட் பெர்மிட்' வழங்கப்பட்டுத்தான் வெளியே செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள். இதனால் யாழ்ப்பாணப் பகுதி மக்களுக்கு எல்லா வழிகளிலும் கஷ்டம் ஏற்பட்டுள்ளது. ஆரம்பத்திலேயே இப்பகுதி மக்களுக்கு தீவிர காலரா தடுப்பு ஊசிமருந்து கொடுக்கப்படவில்லை! நான்கு இலட்சம் பேருக்கு ஊசி மருந்து கொடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டதாயினும், சுமார் பத்தாயிரம் பேருக்கு மாத்திரமே காத்திரமான ஊசி மருந்து கொடுக்கப்பட்டது. மற்றவர்களுக்கு 'மஞ்சுதத்துவ' ஊசி மருந்தே கொடுக்கப்பட்டது. இப்படி ஏன் ஏமாற்றவேண்டும்? யாழ்ப்பாணத்திலுள்ள ஏழு இலட்சம்...'

டாக்டர் என். எம்:- உங்களது மக்கள் வெளியிலிருந்து காலராவைக்கொண்டு வந்தால், அதற்குப் பாதுகாப்பையும் அவர்களே ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்! யாழ்ப்பாணத்துக்கு வேண்டியளவு காலராத் தடுப்பு ஊசி மருந்து கொடுக்கப்பட்டது; அதில்தரக் குறைவு இல்லை...!

நவம்:- அப்படிக் கூறக்கூடாது. திருப்திகரமான மருந்து கொடுக்கப்படவேயில்லை. நான் இதைப் பொறுப்புணர்ச்சியுடன் கூறுகின்றேன்!

எம். என்: நீரும் டாக்டரல்ல—நானும் டாக்டரல்ல அங்கு ஏராளமான டாக்டர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எவரும் எமக்கு இது பற்றிப் புகார் கூறவில்லை!

நவம்:- விசாரணை செய்து பாருங்கள்!

என். எம்:- 'தீபாவளிக்கு யாழ்ப்பாணத்துக்கு செல்ல வேண்டாம் என்று வேண்டுகோள் விடுத்தோம் ஆனால் அதை உங்கள் மக்கள் கேட்கவில்லை. 45,000 பேர் வரை சென்றனர். அத்தோடு தென் இலங்கைக்கும் அதைக்கொண்டு சென்றனர். இப்படி நடந்தால் நாம் என்ன செய்வது? உங்களுடைய மக்கள் தானே இந்த நோயைக்கொண்டு வந்தார்கள். அப்படிக் கொண்டு வந்தவர்கள் அதன் கஷ்ட நஷ்டங்களையும் அனுபவித்தேயாக வேண்டும்.'

ஃ ஃ

குமாரசூரியர்:- தேசியக் கொடியை ஏற்கமாட்டோம் என்று இந்தச் சபையில் திரு. தர்மலிங்கம் கூறியதை அவர் வாபஸ்பெற வேண்டும்!

தர்மலிங்கம்:- அது உங்கள் கொடியென்ற வகையில் அதனை நான் மதிக்கிறேன்!

ஃ ஃ

ஜனாப் மஜீத்:- ஐ. தே. கட்சி —தமிழரசுக்கட்சி கலியாணத்தினால், இந்த நாடு சூறையாடப்பட்டுள்ளது.

தர்மலிங்கம்:- உங்கடை கலியாணத்தால் என்ன வருகுதென்று பார்ப்பம்!

ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீது:- அது கலியாணமல்ல — புளியாணம்!

ஜனாப் மஜீத்:- நாட்டின் நாலாபக்கங்களிலும்சென்று பாருங்கள்—எதைக் காண முடியும் என்று!

தர்மலிங்கம்:- பசியைக் காணலாம்!

ஜனாப் மஜீத்:- இல்லை, மக்கள உழைப்பு உணர்ச்சியைக் காண முடியும். பசியைப் போக்கவேண்டுமானால்...!

தர்மலிங்கம்:- உங்களைப் போக்கவேண்டும்?

ஃ ஃ

ஜனாப் மஜீத்:- சிறுபான்மைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சிறிமா அம்மையார் வழிகாட்டுவார் என்ற நம்பிக்கை யுண்டு!

தர்மலிங்கம்:- எங்களுக்கு அந்த நம்பிக்கை இல்லை!

## யாழ்ப்பாணம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தான் இந்தக்கொடூரவிலைக்கு அரிசி விற்கப்படுகிறது.

''யாழ்ப்பாணத்தில் நீர்ப்பாசன நிலம்இல்லைமழையை நம்பித்தான் அவர்கள் விவசாயம் செய்கிறார்கள். அங்கு விளையும்நெல் யாழ்ப்பாணத்திலுள்ள அனைவருக்கும் போதாது. எனவே வெளி மாவட்டங்களிலிருந்துதான் நெல் அங்கு போகவேண்டும். வெளிமாவட்டங்களிலிருந்து அரிசி, நெல் எடுத்து வருவதோ பெரும் சிரமமாக இருக்கிறது.

''கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு 14 கொத்து அரிசி கொண்டு வருவதற்கு, யாழ்ப்பாண மக்கள் கிளிநொச்சியிலும் ஆனை இறவிலும் எத்தனையோ பேருக்கு 'பூசை'போடவேண்டியுள்ளது! இத்தகைய கஷ்டங்களினால் ஒருகொத்து அரிசியை ஏழு ரூபாவுக்கு வாங்கி உண்ண வேண்டிய கொடூர நிலை — என்றும் இல்லாத பரிதாப நிலை— தமிழ் மக்களுக்கு தோன்றியுள்ளது!

''தோட்டத்தொழிலாளர்களான மலையகத் தமிழர்களைப் பொறுத்த மட்டில் அவர்களுக்கு உண்ண உணவு இல்லை; உழைப்பு இருந்தாலும், அதற்கேற்ற ஊதியம் இல்லை! அவர்களுக்கு கிடைக்கக் கூடிய ஊதியம், ஒரு நாளைக்கு வாழ்க்கை நடத்தவே போதுமானதாக இல்லை. எனவேதான் உங்களின் இன்றைய நடவடிக்கைகள் அனைத்தும் தமிழ் மக்களை பாதித்திருக்கிறதென்று கூறினேன்.

''மலைநாட்டுத் தமிழ் மக்கள் சிறந்த உழைப்பாளிகள் என்பது உங்களுக்குத் தெரியும். எனவே ஏன் அவர்களை உணவு உற்பத்திக்குப் பயன்படுத்தக்கூடாது?

வடக்கு,கிழக்கு மாகாணங்களில் விவசாயம் செய்யக் கூடிய போதியளவு நிலம் உண்டு. இதை ஏன் அவர்களிடம் கொடுத்து உணவு உற்பத்தியை பெருக்கக் கூடாது? உணவுற்பத்தியை விட குறுகிய வகுப்புவாத நோக்கங்களால், மலையகத் தமிழரை வடக்கு, கிழக்கில் குடியமர்த்த மறுக்கிறீர்கள்!

மலையகத்தில் உள்ளவர்கள் இந்நாட்டின் பிரஜையாக இருந்தாலென்ன இல்லாவிட்டாலென்ன, அவர்களுக்கு உணவு கொடுக்க வேண்டியது உங்கள் கடமை. எனவே அவர்களை உணவுற்பத்தியில் ஈடுபடுத்த வடக்கு, கிழக்கில் குடியமர்த்துங்கள். உணவுற்பத்தியில் உண்மையில் அக்கறை இருந்தால் இதைச் செய்யுங்கள்!

## இந்திய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கங்களை இந்தியா வாங்க வேண்டுமென்று கோருவது அவ்வளவு பொருத்தமானதாகத் தெரியவில்லை இந்திய பிரசுரங்களுக்கு இலங்கையில் இருக்கும் செல்வாக்களவு, இலங்கை பிரசுரங்களுக்கு செல்வாக்கில்லை. இதில், இந்தியாவுக்கும், இலங்கைக்கும் உடன்பாடு ஏற்படவில்லையானால் — இலங்கை அரசு இந்தியபுத்தகங்கள், சஞ்சிகைகளிறக்குமதியை கடுமையாக கட்டுப்படுத்துமா?

''இந்திய பிரசுரங்களை வாசிக்கின்ற உரிமையை இலங்கைத் தமிழர்களிடமிருந்து பறிப்பதற்குப் பதிலாக—இலங்கை அரசு உள்நாட்டில் தமிழ் புத்தகம், சஞ்சிகை பிரசுரிப்பாளர்களுக்கு ஊக்கம் கொடுக்குமானால், காலப்போக்கில் இறக்குமதி செய்யப்பட்ட நூல்களைப் படிக்க வேண்டுமென்ற வாசகர்களின் ஆர்வம், இயற்கையாகவே அற்றுவிடும்''

—இவ்வாறு அத்தலையங்கம் கூறுகிறது.

## தமிழில்......

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வடிக்கையின் படி மன்னார் முல்லைத்தீவு, வவுனியாப் பகுதி நீதிமன்றங்களில் விசாரணை செய்யப்படும் வழக்குகள் அப்பீல் செய்யும் போது கொழும்பு கோர்ட்டிற்கே பாரப்படுத்தப்படும்.

இது மாவட்ட ரீதியில் எமது பகுதியைத் துண்டாக்கும் ஒரு சதிச்செயலாகும். இதை நாம் அனுமதிக்கக் கூடாது. நீதித்துறை வாயிலாக எமது பிரதேசம் துண்டாக்கப்படுகின்றது. இது வேண்டுமென்றே திட்டம் திட்டப்பட்டுச் செய்யப்படும் சதிச்செயலாகும்.

இதை நாம் புரியாதவர்கள் அல்லர். தமிழர் கூட்டணி, தமிழரசுக் கட்சியினர் இதை வன்மையாக எதிர்த்தே தீரும்!

—இவ்வாறு உடுப்பிட்டி எம்—பியும், சட்ட மேதையும், முன்னாள் நீதிபதியுமான கே. ஜெயக்கொடி தெரிவித்தவர்.

## நாவிது அடி...

(7ம் பக்கத் தொடர்ச்சி)

பார்கள் என்று நம்புகிறோம்.

குறிப்பு

அடிகளாரின் 1ம் 2ம் பாகங்கள் ஒவ்வொன்றின் விலை ரூ 10/- 3ம் பாகத்தின் விலை ரூ 6/- தபாற் செலவு வேறு பிரதிகள் வேண்டுவோர் அலற்றை, கொழும்பு 13, பிக்கறிங்ஸ் வீதி 111ம் இலக்கத்தில் வசிக்கும் கட்டுரையாளரிடமிருந்தோ, கொழும்பு 13, புளுமென்டோல் வீதி 119/1ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. E. G. R. பொன்னையா அவர்களிடமிருந்தோ பெற்றுக்கொள்ளலாம்.

## தமிழ் இளைஞர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'சுகாதார காரணங்களால் 45 வது நாளுடன் ஒத்தி வைத்த உண்ணாவிரதம் இம் மாதம் 20ந் திகதி தொடக்கம் 25ந் திகதி வரை மீண்டும் தொடர்ந்து நடத்தப் படவுள்ளது.

'20-11-73 மாலை 6.00 மணிக்கு கிளிநொச்சியில் ஆரம்பமாகும் எமதுஉண்ணாவிரதம், 21ம், 22ம், 23ம் திகதிகளில் சாவகச்சேரித் தொகுதியில் நடைபெறும். ஐம்பதாவது நாளான இறுதி நாளன்று (25-11-73) யாழ் முனியப்பர் கோவில் முன்றலில் காலை 6. மணிக்கு உண்ணாவிரதம் ஆரம்பமாகி மாலை 6 மணி வரை நடைபெறும்.

'இதில், பன்னூறு பெண்கள் உட்பட, ஆயிரக்கணக்கானோர் கலந்துகொள்ளவிருக்கின்றனர். அன்று உண்ணாவிரதம் முடிந்ததும், மாபெரும் பொதுக்கூட்டமும் நடைபெறும்.

'தமிழ் மக்களின் விடுதலையை முன்னிட்டு, நாம் எடுக்கும் இந்த நடவடிக்கைக்கு பொது மக்கள் பூரண ஆதரவை அளிக்கவேண்டும்.'

—இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அரசாங்கம், எக்காரணம் கொண்டு தடை விதித்தாலும், திட்டமிட்டபடி உண்ணாவிரதம் நடைபெறும் என்று இளைஞர் பேரவைப் பேச்சாளர் ஒருவர் சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்தார்.

## சிங்கக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற ஓர் மாநாட்டுக்கு என்னையும் அழைத்துச்சென்றிருக்கிறார். அப்போதும், சிங்களத் தேசியக்கொடியையும் தேசிய கீதத்தையும் ஒப்புக்கொள்ளாத இதே தமிழரசுக் கட்சியில் தான் நான் இருந்தேன். இன்றைக்கும் அதே கட்சியில்தான் இருக்கிறேன் என்பதை அமைச்சர் அறிவார்.

'எங்கள் தமிழினத்தின் வரலாற்றில் — இப்போது தவிர — முன் எப்போதும் நாங்கள் சிங்களக் கொடியினால் ஆளப்பட்டதாக ஆதாரமே இல்லை! நாங்கள் எங்கள் சொந்தக்கொடியினால் தான் ஆளப்பட்டு வந்திருக்கிறோம்.'

—இவ்வாறு தொடர்ந்து பேசுகையில் திரு. தர்மலிங்கம் முழக்கமிட்டார்.

## காரைநகர்வடக்கு கிராம சபையின் புதிய தலைவர்!

காரை நகர் வடக்குக் கிராம சபையின் தலைவர் திரு. அ. மு. அம்பலவாணர் தனது பதவியை இராஜினாமாச் செய்ததின் தொடர்பாக திரு. ச. செல்லப்பா வேலுப்பிள்ளை அச்சபையின் புதிய தலைவராக எதிர்ப்பின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் தமிழரசுக்கட்சியின் பொதுச்சபை உறுப்பினருமாவர் —

இதோ மற்றுமோர் சீர்திருத்தப்பெற்ற உன்னத தயாரிப்பு

நியூ மில்க்வைற் சோப்

எங்கும் விற்பனையாகிறது.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,
த. பெ. எண். 77, — யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப் பிரச்சினை எப்போது தீரும்?



சிங்கள அரசாங்கம் இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களை தனிநாட்டுக் கொள்கைக்கு தள்ளுகின்றது என்று தமிழ் தலைவர்கள் எச்சரித்துள்ளார்கள். ஆனல் சிங்கள அரசாங்கம் தனது போக்கை மாற்றுமல் இந்த நிர்ப்பந்தத்தை மேலும் வலியுறச் செய்கின்றது.

இதனல் சிங்கள மக்களின் உள்ளுறைக் கருத்து தெளிவாகின்றது. தமிழ் மக்களை சிங்கள நாட்டிலிருந்து வெளியேற்றி தனி சிங்கள பௌத்த நாட்டை உருவாக்குவதே கருத்து. இதனைச் செய்கையால் உணர்த்தி, சொல்லால் மறுத்து தங்களுக்கும் தமிழ் மக்களுக்கும் நோக்கங்களைப்பற்றிக் குழப்பமான மனநிலைகளை ஏற்படுத்துவதில் அர்த்தம் இல்லை. சொல்லுக்கும், செயலுக்கும் வேற்றுமை இல்லாமல் நோக்கங்களை தெளிவாக வெளிப்படுத்தி சமரசமாகப் பிரச்சினைகளை தீர்த்து வைக்கலாம்.

தனிச் சிங்கள பௌத்த நாட்டை உருவாக்கித் தங்கள் தனித்துவத்தை பாதுகாக்கவும் தொடர்ந்து வளர்க்கவும் சிங்கள மக்களுக்கு உரிமை உண்டு. ஆனல் அந்த நோக்கத்திற்காக தமிழ் இனத்தின் சுதந்திரத்தைப் பறித்து, உரிமைகளை மறுத்து பொருளாதார வளர்ச்சியினைத் தடுத்து, ஆண்டு, இன மாற்றமும், மத மாற்றமும் செய்விப்பதே பிழையானது.

2500 வருடங்களுக்கு முற்பட்ட காலத்தில் இருந்து தமிழரும் சிங்களவரும் இரு வேறு இனங்களாக இலங்கையில் இரு வேறு பிரதேசங்களில் வாழ்ந்து தனி ஆட்சி நடத்திவந்துள்ளனர். பிற் காலத்தில் வந்த அந்நியர் ஆட்சி இந்த இரு வேறு இனங்களை ஒன்ருக்கவில்லை. ஆங்கிலேயர் 1833-ல் ஈழத்துச் சிங்கள நாட்டையும், ஈழத்துத் தமிழ் நாட்டையும் தங்கள் நிர்வாக ஆட்சிக்கான வசதிக்காக ஒன்ருக இணைத்தனர்.

1948-ல் சுதந்திரம் என்ற பெயரில் இரு இனங்களுக்கும் பொதுவாக இலங்கைக்கு ஒரே அரசியல் அமைப்பு சுமத்தப்பட்டது. இந்த அரசியல் அமைப்பை 1972-ல் இரண்டு இனங்களும் வேண்டாம் என்று உதறி வீசினர். இரண்டு இனங்களும் ஒன்ருக வாழலாம் என்ற கருத்தில் அரசியல் நிர்ணயசபையில் அதற்கான அடிப்படைத் திர்மானங்களை ஆராயப் புகுந்தனர். சிங்கள அரசாங்கம் சமர்ப்பித்த அடிப்படைத் தீர்மானங்களில் தமிழினங்களில் சுதந்திரமும், உரிமையும் அமையாது என்று கண்ட பின்னர் தமிழர்கள் அரசியல் நிர்ணய சபையில் இருந்து வெளியேறினர்.

சிங்கள அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட அரசியல் அமைப்புத் திட்டத்தை தமிழினம் ஏற்கவில்லை. ஆனல் தொடர்ந்தும் பிரிவினை ஏற்படாமல் ஒற்றுமையாக வாழ்வதற்காக குறைந்த பட்சக்கோரிக்கையாக அரசியல் அமைப்புத் திட்டத்தை திருத்தி அமைப்பதற்காக தமிழினம் சென்ற வருடம் மே மாதம் ஆறு அம்சக்கோரிக்கையைச் சமர்ப்பித்தது. சிங்கள அரசாங்கம் இதனை ஆலோசிக்காமல் தொடர்த்து தமிழினத்தை நிர்ப்பந்தித்தால் இவ்வருடம் மே மாதம் தமிழினம் சுயாட்சிக்கொள்கையை ஆராய்ந்துள்ளது.

இதன் காரணமாக அதற்கு மேலாக எல்லோரும் தனி ஆட்சிக் கொள்கையையும் ஆராயத்தொடங்கி விட்டார்கள். ஆகவே சிங்கள இனமும், தமிழ் இனமும் இலங்கையில் தனித் தனி ஆட்சிகளை நிறுவினல் ஒருவருக்கு மற்றவர் இடையூறு ஆகாமல் தங்கள் தனித்துவத்தை பாதுகாத்து வளர்ப்பதற்கும் வழி உண்டாகுமா? சரித்திரத்தில் இருந்தது போல மீண்டும் ஈழத்தில் சிங்கள நாட்டையும் தமிழ் நாட்டையும் உருவாக்குவது தான் இரு இனங்களுக்கும் நன்மையாகும்.

சிங்கள இனம் ஏன் தமிழினத்தை பிரிவினைக்கு நிர்ப்பந்திக்கிறது? இதற்கு சில முக்கிய காரணங்கள் உண்டு.

(1) சரித்திரம்

சரித்திரத்திற்கு முற்பட்ட காலம் முதல் சிங்கள இனம் தமிழினம் என்று பிரிந்திருந்தது. இலங்கைக்கு விஜயன் வந்த பின் சிங்கள இனம் திரண்டு உருவானது. தமிழ் இனத்தின் எதிர் நிலையிலே இலங்கையில் இருந்த தமிழ் அரசுகளும் இந்தியாவில் இருந்து காலத்துக்குக்காலம் நிகழ்ந்த படை எடுப்புகளும் இரு இனங்களுக்கும் இடையே உள்ள எதிர்ப்பையும் வேற்றுமைகளையும் வலியுறுத்தின. சிங்களவர் பல முறை தமிழர்களை எதிர்த்து தங்கள் தனித்துவத்தையும் சுதந்திரத்தையும் நிலைநாட்ட வேண்டியிருந்தது.

(2) மானதம்;

சரித்திர உண்மைகளாலும் மொழி சமய கலாச்சாரத்தாலும் இரு இனங்களும் வேறுபட்டு இருப்பதால் சிங்களவ தங்களைச் சிங்களவர் என்றும், தமிழர்கள் தங்களை தமிழர்கள் என்றும் அத்திவாரத்திலிருந்தே நினைத்து வருகின்றனர். இருமக்களுக்கும்தாம் இலங்கையர் என்ற கருத்து, இடையில் ஆங்கிலேயர் காலத்தில் ஆங்கில ஆட்சியில் ஒரு சில அரசியல் உரிமைபெற முன்னின்றவரின் மனதில் உதயமானது. ஆங்கில ஆட்சியும் ஆங்கிலக் கல்வியும் ஒழிந்த பின் இக் கருத்தும் படிப்படியாகப் போகின்றது. அரசியல் ஆதிக்கத்தை விரும்பாத ஆங்கிலம் படித்த முற்சந்ததியினரில் ஒரு சிலரின் மனதிலேதான் இக் கருத்து இன்று எஞ்சி இருக்கின்றது.

(3) இலட்சியம்:

சிங்கள மக்கள் பெரும்பாலும் தங்கள் மொழியையும் இணைத்து தனித்துவம் காணுகின்றனர். இத் தனித்துவத்தை வளர்ப்பதென்றல் தமிழுக்கு இடம் கொடுக்க முடியாது. இடம் கொடுத்தால் தனித்துவத்தில் கலப்பு உண்டாகும். இக்கலப்பை சிங்களவர் விரும்பவில்லை.

(4) பொருளாதாரம்:

தமிழர்கள் படித்து உத்தியோகம் பெற்று சிங்கள நாட்டில் வந்து வாழ்கின்றனர். இன்னும் வியாபாரம், கைத்தொழில், தனித் தொழில்களில் வளர்ந்து இருக்கின்றனர். இந்தியாவில் இருந்துவந்த மற்றத் தமிழர் பரம்பரையான சிங்கள நாட்டின் நிலங்களில், குடியேறி தோட்டங்களில் வாழ்ந்து வருகின்றனர். இதனல் படித்த சிங்களவரும் படியாத சிங்களவரும் பல துறைகளிலும் சிங்கள நாட்டிலே பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நான்கு காரணங்களும் சிங்கள இனத்தை கலப்பற்ற தனித்துவத்துக்கும தமிழரை விலக்குவதற்கும் எடுத்துச் செல்கின்றது. அவை தனி சிங்கள பௌத்த அரசை உருவாக்க ஊக்குகின்றன.

சிங்கள மக்களுக்குள் தமிழர் இருப்பது சிங்களவருடைய இத் தனித்துவத்துக்கு இடையூறுதான். தமிழர்களை ஏற்றுக்கொண்டால் தனித்துவம் அழிந்து கலப்பு உண்டாகும் இலங்கையர் என்று தமிழரையும் சமத்துவம் கொடுத்து ஒரு பன்மை சமுதாயத்தை சிங்கள இனம் அடிப்படையில் ஏற்கவில்லை. ஒரு நாடு, ஒரு இனம், ஒரு மொழி, ஒரு சமயம் என்று சிங்கள இனம் இயங்குவதால் தமிழ் இனத்துக்கு சகல வழிகளில் பிரிந்து போகவேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகிறது.

ஆனல் எந்த நிர்ப்பந்தத்தாலும் 35 இலட்சம் தமிழ் பேசும் மக்களையும் அவர்களுடைய தனித்துவத்தையும் அழிக்க முடியாது.

தமிழ் இனம் இந்த நிர்ப்பந்தத்தை அகிம்சை வழியில் எதிர்க்கின்றது. அதனல் காலப்போக்கில் வெளிநாடுகளின் தலையீட்டுக்கும் பலாத்காரத்துக்கும் இப்பிரச்சினை வித்தாக அமையும் அபாயம் உண்டு. தமிழர்களை சிங்கள நாட்டில் தங்களுக்குள்ளே வைத்துக்கொண்டு சிங்கள இனம் தனித்துவம் காண முடியாது. தமிழர்களை சிங்கள நாட்டில் இருந்து வெளியேற்றித்தான் தன் தனித்துவத்தைக் கண்டு பாதுகாக்கலாம். சிங்களவர்கள் இப்படித்தான் தனிச் சிங்கள பௌத்த நாட்டை உருவாக்கலாம்.

### ஈழத் தமிழ்நாடு 'மெத்தை'

தமிழர்கள் வெளியேற்றப்பட்டு தனித் தமிழ் நாடு அமைக்கவேண்டி வரும். தனிச் சிங்கள நாட்டை உருவாக்குவதால் சிங்கள இனத்துக்கு நன்மையேயாகும். கள்ளத்தோணிப் பிரச்சினை. வேலைவாய்ப்புப் போட்டி பிரச்சினை, குடியுரிமைப் பிரச்சினை, பொருளாதார பிரச்சினை சமயப் பிரச்சினை பலவும் சிங்கள மக்களுக்கும் இல்லாமல் பெரிதும நீங்கிவிடும். இன்னும் தமிழர்களாலும் இந்தியாவாலும் அபாயம் என்ற ரீதியான பயமும் நீங்கிவிடும்.

சிங்கள நாட்டிற்கும் இந்தியாவிற்குமிடையில் மெத்தையாக ஈழத் தமிழ் நாடு அமையுப சிங்கள இன, தமிழ் இன எதிர் நிலையால் வரக்கூடிய அந்நியர் தலையீட்டுப் பயமும், பலாத்கார இயக்கங்களுக்குரிய காரணங்களும் தாமாகவே நீங்கும்.

இச் சிந்தனைகளையும் தத்தம மனங்களில் ஆளக்கிடக்கும் அபிலாசைகளையும் சமரசமாக வெளிப்படுத்தி தங்கள் தங்கள் மனதில் உள்ள இலட்சியங்களைப் பற்றிய தெளிவற்ற குழப்ப நிலைகளை மாற்றுவது இரு இனங்களுக்கும் அவசியம் ஆகின்றது.

தமிழர்கள் சிங்களவர்களுக்கு இடையூருக அவர்கள் மத்தியில் தங்கி வாழும் இனமாகதொடர்ந்து வாழாமல் தங்களைத் தாங்கள் ஆளும்பொறுப்பைஏற்க ஆயத்தமாக இருக்கவேண்டும்.

('தமிழினத்தின் விடுதலைக் குரல்' எனும் நூலுக்கு அளித்துள்ள முன்னுரை)

**சி. கதிரவேலுப்பிள்ளை பா. உ.**

பொதுச்செயலாளர்—இலங்கைத் தமிழரசுக்கட்சி)

---

# "இலங்கை வானொலி புகழ் நிலைய வித்வான்கள்"

திருவாளர்கள் கைலாசபதி, சிவத்தம்பி இன்னேரன்ன 'முற்போக்குவாதிகள்' எனத் தம்மை அழைத்துக்கொள்ளும் பிரகிருதிகள் இலங்கை வானெலியைக் குத்தகைக்கு எடுத்துக்கொண்டு அங்கு கூடாரமடித்துத் தங்கிவிட்டதும், ஏதோ கண்டறியாததைக் கண்டுவிட்ட மாதிரி தமது 'அறிவுக்களஞ்சியங்களை' வானெலி அலைகளிலே நாள் முழுவதும் மிதக்கவிட்டுக் கொண்டிருப்பதும், வானெலிச் சுவைஞர் இந்த 'அறுவை' தாங்காது வானெலிப் பெட்டியை மூடி வைத்துக்கொண்டிருப்பதும் நாட்டிலே நாற்றமடிக்கும் விஷயங்களாகும். நாட்டின் கேந்திரமான முக்கிய நிறுவனமொன்றில் இந்தத்தேவதைகளின் கூலிக்கூத்தினல் தெருப்புழுதி பறக்கிறது.

ஈழத் தமிழர்களுக்கும் தமிழ் நாட்டுக்குமிடையிலான பன்முகப்பட்ட உறவை வெட்டிப் பிளப்பதில் இந்த 'வானெலி வீரர்' முன்னின்று உழைப்பது நாடறிந்த விடயம். இலங்கைக்கு வெளிநாட்டு நூல்களை இறக்குமதி செய்தல் தொடர்பில் கல்வியமைச்சரால் நியமிக்கப்பட்ட குழுவொன்று அண்மையில் அறிக்கையொன்றை சமர்ப்பித்தது. அரசாங்கத்திற்குச் சாதகமானதும் தமிழினத்துக்குப் பாதகமானதுமான கருத்துக்களைத் தொனிப்பார்கள் என்ற காரணத்தால் இத்தகைய குழுக்களில் கோடரிக்காம்புகளில் ஒன்ருே இரண்டோ, தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இடம் பிடித்துக் கொள்வது வழக்கம். மேற்படி குழுவில் இடம்பிடித்துக் கொண்டவர் திரு.கா. சிவத்தம்பியாகும். எதிர்பார்த்தபடி அவர் தமிழ் நாட்டிலிருந்து வரும் நூல்களைக் கட்டுப்படுத்துவதற்கான தமது திட்டத்தை முன்வைத்தார். குழுவும் மகிழ்ச்சியோடு அத் திட்டத்தை ஏற்று விதந்துரைத்துள்ளது.

சென்ற வெள்ளிக்கிழமை தேயிலைப் பிரச்சாரசபை மண்டபத்தில் நடைபெற்ற உண்ணுட்டு இறைவரித் திணைக்களத்தின் உரையரங்கில் 'மறுமலர்ச்சி இலக்கியங்கள்' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றிய கரிகாலன் மேற்படி குழுவின் அறிக்கை பற்றிக் குறிப்பிட்டுப் பின்வருமாறு கூறினர் :-

'வேறெந்த நாட்டிலிருந்து வரும் நூல்களுக்கும்இல்லாத நிபந்தனையையும் கட்டுப்பாட்டையும் இந்தியாவிலிருந்து வரும் நூல்களுக்கு விதிக்க விரும்புகின்றனர். காரணம், இந்நூல்களால் பயன்பெறுவோர் தமிழர். இதனைச் செய்யும்படி கேட்டுள்ளவர் திரு. சிவத்தம்பியாகும். 'இலங்கை வானெலி புகழ் நிலைய வித்வான்களான' திருவாளர்கள் சிவத்தம்பி, கைலாசபதி போன்ருேர் தமிழ்மொழியினல் தமது வாழ்வை அமைத்துக்கொண்டவர்கள். தமிழ் தான் அவர்களுக்குச் சோறு போடுகிறது. தமிழருக்கு விரோதமான, துரோகமான கருத்துக்களைக் கூற வேண்டும்—கூறுவார்கள் என்பதற்காகவே இவர்களை இந்தக் குழுக்களில் நியமிக்கிருர்கள். அது அவர்கள் பிழைப்பாகிவிட்டது. ஆனல், நண்பர்களே இந் நாட்டுத் தமிழ் மக்களின் இலக்கியத்துறையில், கலைத் துறையில், பண்பாட்டுத் துறையில், சமயத்துறையில் மறுமலர்ச்சி ஏற்படவேண்டுமானல் எமக்குத் தமிழ்நாட்டின் உறவு அவசியம்' எனக் குறிப்பிட்டார்.

**கைலாசபதி-சிவத்தம்பி பற்றி கரிகாலன் வாணனை**

---

## அனுதாபம்

சுதந்திரன் அச்சகத்தின் முன்னள் ஊழியர் திரு. த. பத்மநாதனின் அருமைத் தாயார் திருமதி. அன்னபூரணம் அவர்களின் மறைவையொட்டி பத்மநாதன் குடும்பத்தினருக்கு சுதந்திரன் ஊழியர்கள் தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிருர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாவீது அடிகளின் சொற்பிறப்பு ஒப்பியல் தமிழ் அகராதி -(3ம் பாகம்)

தமிழ் மொழியின் தொன்மையையும் இனிமையையும் தகுந்த ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டியும், மேல் நாட்டு மொழியியல் அறிஞர்கள் சிலராலும்—ஏன், தமிழ் நாட்டு அறிஞர்கள் பலராலுங்கூட — ஆரிய மொழிச் சொற்கள் என்று எடுத்துக் கூறப்பட்டுள்ள சொற்களிற் பல, உண்மையிலே, தாமீழச் சொற்களே என்பதை, எதிர்ப்பேச்சுக்கு இடமின்றி, நூற்றுக்கும் அதிகமான மொழிகளிலிருந்து எடுத்துக் காட்டுக்களுடனும் பழந் தமிழ் இலக்கண, இலக்கியங்களிலிருந்து மேற்கோள்களுடனும் நிரூபித்து நிலை நாட்டி வரும் தாவீது அடிகளாரின் சொற்பிறப்பு—ஒப்பியல் அகராதியின் மூன்றும் பாகம் இப்பொழுது வெளிவந்திருக்கின்றது.

நளா காதை என்று பெயரிடப்பட்டுள்ள இப்பகுதியில்;

அள் — அட், — அண்;
ஆள் — ஆட், — ஆண்;
இள் — இட், — இண்;
ஈள் — ஈட், — ஈண்;
தொள்—தொட்,—தொண்;
பள் — பட், — பண்;

என்னும் பதங்கள் ஆழமாகவும் அகலமாகவும் ஆராயப்பட்டுள்ளன.

ள் என்னும் எழுத்தில் முடிவுறும் ஓரசைப் பதங்கள் இப்பாகத்தில் ஆராயப் படுவதால் இப்பாகம் நளா காதை என்று அழைக்கப்பட்டுள்ளது.

இதற்கு முந்திய பாகங்களாகிய முதலாம் இரண்

# நளா காதை

டாம் பாகங்கள் முறையே லீலா காதை என்றும் மைந்தன் என்றும் அழைக்கப்பட்டுள்ளன.

லீலா கதையில், ல் என்னும் எழுத்தில் முடிவுறும் ஓரசைப் பதங்கள் ஆராயப்பட்டிருந்தன. அப்பாகத்தில், ஒல், கல், கால், சொல், சால், சில், நால், நில், பல், பால், புல், போல், பொல், வால், வல் ஆகிய பதங்கள் ஆராயப்பட்டிருந்தன.

மைந்தன் என்பதில், ய், ல், ள், ழ் என்னும் எழுத்துக்களில் முடிவுறும் ஓரசைப் பதங்கள் ஆராயப்பட்டிருந்தன. 'பாய்' பிற்காலத்தில் 'மை' ஆயிற்று. ஆனதினுற்றான் இப்பாகம் மை-ந்தன் என அழைக்கப்பட்டது இப்பாகம் பெரும்பாலும் ஆங்கில மொழியில் எழுதப்பட்டுள்ளது, ஆங்கிலங் கற்ற சிங்களவர்க்கும் இம் மரபையைக் காட்டுவதற்கு.

இதில் தமிழ் கற்காதவர் புரிந்து கொள்வதற்காக 'லீலா காதை'யில் 'ல்' என்னும் எழுத்தில் முடிவுறும் ஓரசைப் பதங்களைப் பற்றிச் செய்யப்பட்டிருந்த ஆராய்ச்சியின் சுருக்கம் ஆங்கில மொழியில் கொடுக்கப்பட்டுள்ள தோடு, ழ், ய், ச் என்னும் எழுத்துக்களில் முடிவுறும் 'கலும், கலிழ்' 'கமழ்' போன்ற ஈரசைப் பதங்களும், 'மாய், மாச், மச், மைத்' என்பனவும், ஓரசைப் பதங்களாகிய வீழ், ஈழ், பூழ் / போழ் பாழ், பழ்; 'தாமீழ், தமிழ்' என்பனவற்றின் ஈற்றில் வரும் 'ஈழ' என்பதின் பிறப்பிடமான யாழ், எழ், இல் என்னும் பதங்களும், ல் (ஞ), ள் (ஞ) என்னும் எழுத்தில் முடிவுறுஞ் சிங்களப் பதங்கள் சிலவும் ஆராயப்பட்டுள்ளன.

தாவீது அடிகளாரின் சொற்பிறப்பு ஒப்பியல் அகராதி, இது போன்ற ஏனைய அகராதிகளிலிருந்தும் மாறுபட்டது; புதுமையானது.

ஒரு சொல்லின் உற்பத்தி என்ன, அதன் மாற்றங்கள் என்ன, என்பவற்றைக் காட்டி விட்டு நின்று விடாமல், அச் சொல்லின் உற்பத்தி எப்படி ஏற்பட்டது, மாற்றங்கள் எப்படி ஏற்பட்டன என்பனவற்றையும் படிப்படியாகக் காட்டியிருக்கிறார் தாவீது அடிகளார். தன்னுடைய முடிவுகளுக்குத் தான் வந்திருக்குங் காரணங்களை வாசகர்களும் அறிந்து கொள்ளும் பொருட்டு, பல பாத்திரங்களைக் கொண்டு உரையாடல்களை ஏற்படுத்தி, வாசகர்களின் மனதில் நியாயமாக எழக் கூடிய ஐயங்களை, கேள்விகளை— ஏன், குதர்க்கமான, நியாயமற்ற கேள்விகளையும் கூட— அப்பாத்திரங்கள் சிலவற்றின் மூலம் எழுப்பி, அப்பாத்திரங்கள் சிலவற்றினைக் கொண்டு அவற்றுக்குத் தகுந்த விளக்கங்களைத் தெளிவாகவும் ஆதாரங்களுடனும் கொடுத்து தர்க்க ரிதியாகத் தனது முடிவுகளை நிலை நிறுத்திச் செல்லுகின்றார் தாவீது அடிகளார்.

அதனால், 'ஒரு சொல்லின் உற்பத்தி இதுதான், மாற்றங்கள் இவைதான்' என்று அகராதியைப் படித்த ஒருவர் சொல்லி விட்டு அவை எப்படி, ஏன், ஏற்பட்டன என்று கேட்டால் சொல்லத் தெரியாமல் விழிக்க வேண்டிய நிலை இவ் அகராதியைப் படிக்கும் ஒருவருக்கு ஏற்பட முடியாது. அப்படியான வகையில் இவ் அகராதி வெகு விரிவாகவும், விளக்கமாகவும் எழுதப்பட்டுள்ளது.

இவ் அகராதியை இப்படியாக எழுதுவதற்கு ஏவியது அடிகளாருக்குப் பல மொழிகளில் இருக்கும் ஆழமான அறிவும் அவ் அறிவிலுள்ள திடமான நம்பிக்கையுந் தான் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

### அருள்

எமயா என்பது சிங்களத்தில் இளம் பையனைக் குறிக்கும். இது, இளமை என்ற தமிழ்ச் சொல்லில் இருந்து பிறந்தது என்பதைப் பல ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டியிருக்கிறார் அடிகளார் நளா காதை ஆகிய மூன்றும் பாகத்தில்.

'இளமை' என்று கருத்தையும் அதனோடு சம்பந்தமான கருத்துக்களையும் குறிப்பவையுமான, ளந்த, ளதறுவா, லதறி, லபடி, லபல்லா, லலனவா ஆகிய 6 சொற்களை குணசேன சிங்கள—ஆங்கில பொக்கெட் அகராதியிலிருந்தும், ள, ளத, ளதயா, ளதரீ, ளதரு, ளதருவா, ளதுளுவ, ளந்த, ளபக், ளபடி, ளபடியா, ளபத, ளபல்ல, ளமயா, ளமா, ளா, ளாதளுவ, ளாபல, ளாபால, ளாபா லயா, ளாமக, ளாமகயா, ளய், ளபத்த, ளமடைய, ளென்சு(த்)து, ளெளிகுணய, ளொட, ளொந்த ஆகிய 29 சொற்களை வண. கார்ட்டெரின் சிங்கள-ஆங்கில அகராதியிலிருந்தும் [illegible] கருத்துக்களோடு [illegible] காட்டியிருப்பதோடு கன்ன

ம்(எள், எள, எளெ, எளது, எளெது), துளு (எளது, எளெ, ளத்து, ளம்மு), பர்ஜி (இளெ), கட்ப (இளெத்), கோண்டு (ளெயா, ரையா, டீயான், மலையாளம் (இளம்) கொலமி (ளெங்க), நைக்கி (ளெங்க), குயி (ளெதி) ஆகிய மொழிகளிலிருந்தும் 'இளமை' என்பதிலேதோ அதனைச் சார்ந்த பொருளிலேதோ கருத்துக்களையும் உச்சரிப்புக்களையும் கொண்ட சொற்களை எடுத்துக்காட்டி: மேலும் கிரேக்கம், லத்தின் ஆகியமொழிகளிலிருந்தும் எடுத்துக் காட்டுகள்கொடுத்துத் தன் கருத்தை எதிர்க்க முடியாத வகையில் நிலை நிறுத்திச் செல்லுகின்றார் அடிகளார்.

இவருடைய அகராதியில் ஆராயப் பட்டுள்ள சொற்களெல்லாம் இத்தன்மையாகவே, பல ஆதாரங்களுடன் ஆழமாகவும் அகலமாகவும் ஆராயப்பட்டுள்ளன.

திரைப்படங்களுக்கு விளம்பரம் செய்வோர், ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியில் ஒரு சிறு பகுதியை எடுத்துக் கூறி விட்டு 'மற்றவற்றை வெள்ளித் திரையில் நேரில்சென்று கண்டு களியுங்கள்' என்று கூறுவதை நாமும் கடைப்பிடித்து 'ஏனையவற்றை அகராதியை வாங்கிப் படித்து மகிழுங்கள்' என்றே கூறி வைக்க விரும்புகிறோம்.

தாவீது அடிகளார் முன்பு டேவிட் சுவாமியார் என்றே அழைக்கப்பட்டு வந்தார். அவர் தாடி வைத்திருந்த படியினால், அவர் படிப்பித்து வந்த சம்பத்திரிசியார் கல்லூரி மாணவர்கள் சிலர் அவரைத் தாடிக்காரச் சுவாமியார் என்றும் அழைத்து வந்தனர். அவர் தமிழின் மீதுகொண்ட ஆர்வத்தினால் தன் பெயரைத் தாவீது அடிகள் என்று மாற்றிவைத்துக் கொண்டார்.

திராவிடமொழிகளின் சிறப்புகளை அவர் திறமையாக ஆராய்ந்து வருவதால், நாம் அவரைத் திராவிட அடிகள் என்று அழைக்கலாமோ என்று தோன்றுகின்றது. தவறு திராவிட மொழியைத் தாமீழ மொழி என்று அவர் குறிப்பிடுவதால் அவரைத் தாமீழ அடிகள் என்று அழைப்பதுதான் பொருத்தமாக விருக்கும்!

இந்தத் தாமீழ அடிகளார் ஒரு துறவியார். கத்தோலிக்க மதக் குரவர். கலியாணம் செய்து கொள்ளாத ஒரு பிரமச்சாரி. இருந்தாலும் அவருக்கு ஒரு மனைவி இருக்கிறாள். அதுவும் எப்படிப்பட்ட மனைவி! அப்பப்பா! கற்புடையவள், கற்றுத்தெளிந்தவள்!!

தமிழ், ஆங்கிலம், சிங்களம், சமஸ்கிருதம், லத்தீன் கிரேக்கம் முதலிய முப்பத்தி இரண்டு மொழிகளும், அரசியல், பொருளாதாரம், சரித்திரம், பூமி சாஸ்திரம், போன்ற பல சாஸ்திரங்களும் துறைபோகக் கற்றுத் தேர்ந்த ஒருத்தி! ஆம், அவள் ஒரு சகல கலாவல்லி. அவளுடைய பெயர் கல்வியாகும். 'கல்வியே கற்புடைப் பெண்டிர்' என்று [illegible] [illegible] டிற்கும் அடிகளாருக்கும் பிறந்திருக்கும் பிள்ளைகள் தாம் லீலாகாதை, மைந்தன், நாளாகாதை ஆகிய மூன்று குழந்தைகளும்! இன்னும் ஆறு குழந்தைகளைப்பெற்றெடுப்பதற்கு அடிகளார் திட்டமிட்டிருக்கிறார்கள்.

'கல்வியே கற்புடைப் பெண்டிர்' என்று கூறிய குமரகுருபரர் 'அப்பெண்டிற்கு செல்வப் புதல்வனே ஈங்கவி' என்றுஞ் சொல்லியிருக்கிறார் அல்லவா? தாமீழ அடிகளும் அவருடைய சகல கலாவல்லியான கல்வியெனுங் கற்புடை மனைவியும் ஒன்பது பிள்ளைகளை மட்டுமல்ல மேலும் பல பிள்ளைகளைப் பெற்



றெடுத்துத் தமிழ்ச் சமுதாயத்துக்கு அளிப்பார்களாக! அவர்களுடைய பிள்ளைகளை —தமிழுக்கு ஈடில்லாப் புகழ் தேடிக்கொடுக்கக் கூடியவரிவனே—தமிழ் மக்கள் மனமுவந்து வரவேற்று உபசரிப்

(6ம் பக்கம் பார்க்க)

## கவிதைப் பூங்கா

# அறிவே தெய்வம்!

—தாமரைத் நிவான்—

அறிவுக்குப் பெரிய பகை அறியாமை ஒன்றேதான்
அறிந்துகொள்வாய்!
அறிவொன்றே பெரிய ஒளி அறியாமை கொடிய
இருள் அதுவுமன்றி
அறிவுனது நற்றேழன் அறிவேதான் வழிகாட்டி
அறிவே தெய்வம்!
அறிவிற்கும் மேல் ஏதும் உண்டென்றால் அதைச்
சற்றே அறியத்தாராய்!

அறிவைத்தான் தேடிக்கொள் அறிவுக்கே தலை
வணங்கு அறிவைப் போற்று!
அறிவுலகுக்கே சென்று அறிவொளியில் நடமாடு
அறிவை நம்பு!
அறிவுள்ள நூலைக்கல் அறிவுள்ள பேச்சைக் கேள்
அறிவாய்ப் பேசு!
அறிவுக்குத் தடைபோட்டு அதை நிறுத்தப்
பாராதே அது கூடாது!

எப்பொருளை யார் சொன்னால் என்ன அதை ஏன்
என்றே எப்போதும் கேள்!
அப்பொருளின் மெய்ப்பொருளைக் கண்டுபிடி
அதுவரையில் அதை நம்பாதே!
இப்பொருளை ஏனென்று கேளாமல் ஏற்றுக்கொள்
என்றே சொன்னால்
ஒப்பாதே! உன் அறிவை விற்றுவிட ஒருபோதும்
ஒருப்படாதே!

கேட்டுக்கல்—கிண்டிக்கல்—கிளறிக்கல்
அதனாலே இடைக்கும் நன்மை!
ஆட்டாதே தலைதன்னை ஆமாமாம் போடாதே
அதுதான் தீமை!
காட்டாமற் காரணங்கள் கண்மூடிக் கல்விதனைக்
கற்றதாலே
மாட்டுவால் போலன்றோ போகிறது நம் மக்கள்
மதியும் போக்கும்!

கண்டவுடன் நம்பாதே கேட்டவுடன் நம்பாதே
காரணம் பார்!
மண்டுகளும் மேதைகளாய் மேதைகளும்
மண்டுகளாய் மாறக்கூடும்?
உண்டவுடன் ஒருவேளை உணவுமுறை பற்றி எதும்
உரைக்கலாமோ?
திண்டாடும் நிலைமாறித் திடமான முடிவுக்குச்
செல்லல் வேண்டும்!

அறிவுநூல் முறையாகக் கற்றதனால் அல்லவோ
நமது அண்ணன்
அறிஞனெனப் பேர்பெற்று நமக்கெலலாம் அறிவு
தனை அளித்துச் சென்றான்
அறிவிருந்த் காரணத்தால் அண்ணனுடன்
மோதியவர் அடைந்தார் தோல்வி!
அறிவொன்றே அண்ணாவின் போர்க்கருவி
நமக்கெல்லாம் அதுவே தேவை!

அறிவான தமிழுண்டு அது தந்த குறளுண்டு
அண்ணாவுண்டு!
அறிவுக்கு அணைபோடச் சொல்கின்ற அறிவிலிகள்
குழுவுமுண்டு!
அறியாமை இருளுக்குட் செல்லாதே அறிவிலிகள்
பின்போகாதே!
அறிவொளியை நாடிப்போ ஓடிப்போ அமைதியுடன்
அஞ்சாமற்போ!

உன்நெஞ்சு நம்பென்றால் நீ நம்பு அல்லாமல்
மற்றவர்கள்
தன்சொல்லால் நம்புவதேல் உனக்குமொரு
தலையுண்டு தடவிப்பாராய்!
என் சொல்லுமப்படியே ஆராய்ந்தே அல்லாமல்
ஏற்றிடாதே!
பொன்வில்லை யானாலும் உரைகல்லும் தேவை
அதைப் புரிந்தால் போதும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது


# சிலோன் தியேட்டர்ஸ் திரைகளில்

**செல்லமகால்**
2-வது வாரம்
எம்.ஜி. ஆர்-சரோஜாதேவி
—நடித்த—
**அரச கட்டளை**

**கெயிட்டி 3-வது மாதம்**
கே. பாலசந்தரின்
**அரங்கேற்றம்**

## வெகு விரைவில் எதிர்பாருங்கள்!

**செல்லமகால்** | **கெயிட்டி**

மக்கள் கலைஞர்
## ஜெய்சங்கர்

சோ,
தேங்காய் சீனிவாசன்,
எம். ஆர் ஆர். வாசு
பாரதி—என். எம். ராஜம் நடித்த
**உனக்கும் எனக்கும்**

நாகேஷ்,
வி. கே. ராமசாமி,
எஸ். வி. சகஸ்ரநாமம்,
வி. எஸ். ராகவன், லட்சுமி,
ரமாபிரபா, காந்திமதி, பார்வதி
—நடித்த—
**நவாப் நாற்காலி**

4-வது பெருமைமிக்க ஜனரஞ்சக வாரம்!

**சென்ட்ரல்** (மருதானை) **ராணி** (யாழ்நகர்) **ஈரோஸ்** (பாமன்கடை)

தினசரி 2—6—9.30 ஞாயிறு காலை 10மணி | 10.30—2.30—6.00—9.30 மணி | 2—6—9.30 ஞாயிறு காலை 10மணி

இதயத்தை உருக்கும் தாயின் அன்பு! அழகும், வலிமையும் அன்புக்கு நிகரில்லை!
தாய், தந்தை, சகோதரர்கள் மெச்சத்தகுந்த ஓர் சித்திரம்!
**இக்கதையின் முடிவை யாருக்கும் சொல்லாதீர்கள்!**
சிரிப்பும், அழுகையும் சரிவர நிறைந்த எல்லோரும் பார்க்கவிரும்பும் உன்னத நடிப்பு!
**ஜெயா, முத்துராமன், சாவித்திரி, சகுந்தலா, சோ, மனோரமா நடித்த—**

# பெத்த மனம் பித்து

(பாஸ்கள் ரத்து)



4-வது வாரம்

**கிங்ஸ்லி** (கொழும்பு) **பிளாசா** (வெள்ளவத்தை) **வெலிங்டன்** (யாழ்நகர்)

ஜெமினி, ஜெயந்தி, நாகேஷ்,
முத்துராமன், M. R. R. வாசு,
சுந்தரராஜன் A. சகுந்தலா
நடித்த—
கே. பாலச்சந்தரின்

# புன்னகை

இது ஒரு வழக்கமான கதையல்ல
வாழ்க்கையில் அடி எடுத்து வைக்கும்
நால்வரின் குறைநிறைகளை
விமர்சிக்கும் ஒரு கட்டுரை...
**முதன் முதலாக**
ஒரு திரைப்படமாக வந்திருக்கிறது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை 194 ஏ. இலக்கத்தில் 1973ம் வருடம் நவம்பர் மாதம் 18-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.